# யா/யூனியன் கல்லூரி

# சைவநெறி

# 01.கடவுள்

01. பரம்பொருளைக் குறிப்பதற்குப் பயன்படும் தமிழ்ச் சொல் எது?
ॐ கடவுள்

02. அச்சொல் உணர்த்தும் மூவகைப் பொருள்களும் யாவை?
1. உலகத்தை இயக்குபவர் - (கடவுதல் - இயக்குதல்)
2. உள்ளத்தைக் கடந்தவர் - (சிந்தனைக்குள் அடங்காதவர்)
3. உலகத்தைக் கடந்தும், அதேசமயம் உலகினுள்ளும் உள்ளவர் (கட – கடந்த நிலை, உள் - உலகினுள்ளும் உயிர்களுள்ளும் வியாபித்திருக்கும் நிலை)

03. பிராமணங்கள் என்றால் என்ன?
ॐ கடவுள் உண்மையை நிறுவுவதற்குப் பயன்படுத்தும் வழிமுறைகளாகும்.
1. பிரத்தியட்சம்
2. அநுமானம்
3. ஆப்தவாக்கியம்

04. கடவுளுண்மையை நிறுவுவதற்கு, பிரத்தியட்சப் பிரமாணம் பயன்பட முடியாமைக்கான காரணம் யாது?
ॐ ஏனெனில் பிரத்தியட்சப் பிரமாணம் எமது பொறிகள் வாயிலாகப் பெறும் அறிவு ஆகும். இதனால் இறைவன் தொடர்பான ஞானக்காட்சியை உணர்த்த முடியாது.

05. ஆப்த வாக்கியம் என்றால் என்ன? எமது சமயத்தில் ஆப்த வாக்கியமாகக் கொள்ளப்படுவன யாவை?
ॐ ஆப்த வாக்கியம் என்றால் உண்மை வாக்கியம் என்று பொருள்படும். ஞானியர், தாம் கண்டுணர்ந்த உண்மைகளைக் கூறியுள்ளனர். அவர்கள் கூறிய விடயங்களே ஆப்த வாக்கியம் எனப்படும்.
1. வேதங்கள்
2. ஆகமங்கள்
3. தேவாரம்
4. திருவாசகம்

06. அநுமானப் பிரமாணம் என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக.
ॐ இறைவனை உணர்ந்து கொள்ளும் முறையே அநுமானப் பிரமாணம் ஆகும்.
ॐ உ – ம் : நெருப்பையும் அதிலிருந்து புகை வெளிவருவதையும் பலமுறையும் கண்டு உணர்ந்தவர்கள், தூரத்தில் புகை மாத்திரம் தெரியும் போது அங்கே நெருப்பும் இருக்கும் என உணர்கின்றமையைக் குறிப்பிடலாம்.

07. உலகம் படைக்கப்பட்ட பொருள் - நிறுவுக.

- ௐ உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் ஒரு காலத்தில் தோன்றி, இன்னொரு காலத்தில் அழிகின்றது. இதன்மூலம் உலகம் முழுவதும் ஒருகாலத்தில் தோன்றியது என்பதும் ஒரு காலத்தில் அழியப்போவது என்பதும் தெளிவாகின்றது. அதாவது உலகம் அநாதியானது அல்ல என்பது தெளிவாகின்றது. இப்படிச் சிந்திக்கும் போது உலகம் படைக்கப்பட்ட பொருள் என்ற முடிவுக்கு வரலாம்.

08. தனு, கரணம், புவனம், போகம் என்பவற்றை விளக்குக.

- ௐ தனு – உடம்பு
- ௐ கரணம் - மன முதலிய கருவி
- ௐ புவனம் - உடம்புக்கு ஆதாரமாகிய உலகம்
- ௐ போகம் - அனுபவிக்கப்படும் பொருள்

09. கடவுள் உலகைப் படைத்ததன் காரணம் யாது?

- ௐ உயிர்கள் அநாதி காலமாக கட்டுண்டு அல்லற்படுபவை. ஆணவ மலத்தினின்றும் அதனால் உண்டாகும் அல்லல்களினின்றும் விடுபட்டு உயிர்கள் ஈடேறுவதற்குத் துணையாகவே கடவுள் உலகைப் படைத்தார். உலகம் என்னும் போது உயிர்கள் உறைகின்ற உடல், அவை அறிவைப் பெறுவதற்குக் கருவிகளாகிய கரணங்கள், உடலோடு கூடிய உயிர்கள் உலவுகின்ற உலகம், உயிர்கள் அனுபவிக்கின்ற இன்பதுன்பங்கள் என அனைத்தையும் குறிக்கும்.

10. சிவனுக்கும் சக்திக்கும் இடையிலான தொடர்பு எத்தகையது?

- ௐ சிவனும் சக்தியும் ஒன்றாகும்.

11. தமிழ் வேதங்கள் எவை?

- ௐ தேவாரம், திருவாசகம்

12. சைவசித்தாந்தம் கடவுள் உண்மையை எவ்வாறு நிரூபிக்கின்றது?

- ௐ 2 வகையில் நிரூபிக்கின்றது.

1. கடவுள் உண்டு என்பதைத் தக்க காரணங்கள் காட்டி நிரூபித்தல்.
2. கடவுள் இல்லை என்று வாதிப்பவர்களுடைய வாதங்கள் பொருத்தமற்றவை என்று தக்க காரணம் காட்டி மறுப்பது.

## 02. தெய்வ சிந்தனை

01. அறிவுடைமை என்பதற்குத் திருவள்ளுவர் தரும் விளக்கம் யாது?
 - ૐ நாம் செய்யும் காரியங்களால் விளையப் போவது நன்மையா தீமையா என்பவற்றை உய்த்துணர்ந்து தீமையிலிருந்து விலகி நன்மையை நாடிச் செயற்படும் ஆற்றலே அறிவாகும். மனதை அதன் போக்கிற் போகவிடாது தீமையினின்று விலக்கி நன்மையை நோக்கிச் செலுத்துவதே அறிவுடைமையாகும்.

02. நமது சமயம் வலியுறுத்தும் பிரதான உண்மைகளாக இங்கு சுட்டப்படுபவை எவை?
 - ૐ புண்ணிய காரியங்களில் ஈடுபடல்.
 - ૐ பழி பாவங்களிலிருந்து விலகி நடத்தல்.
 - ૐ கடவுள் வழிபாடு.
 - ૐ தியானம்.
 - ૐ ஒழுக்கம்.

03. திருவள்ளுவர் பேதமை என்று எதனைக் குறிப்பிடுகின்றார்?
 - ૐ பழி பாவங்களுக்கு அஞ்ச வேண்டாம். அவ்வாறு அஞ்சவில்லையென்றால் அது அறியாமை (பேதமை) ஆகும்.

04. நாம் வாழுமிடங்களிலெல்லாம் திருக்கோயில்களை அமைப்பதன் முதன்மை நோக்கம் யாது?
 - ૐ திருக்கோயில்களில் பிரதானமாக இரண்டு விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது ஆலயக் கோபுரம், மணியோசை என்பனவாகும். இவற்றில் மணியோசையைக் கேட்கும்போதோ அல்லது ஆலயக் கோபுரத்தைப் பார்க்கும்போதோ நம் அனைவருக்கும் இறைவன் பற்றிய நினைவினையும் தெய்வீக சிந்தனையையும் வளர்ப்பதற்காகவாகும்.

05. நாம் எப்பொழுதும் தெய்வ சிந்தனையுடன் இருக்க வேண்டிய அவசியம் யாது?
 - ૐ ஏனெனில் நாம் எந்தக் காரியத்தையும் தெய்வ சிந்தனையுடன் செய்ய உதவும்.

06. கடவுள் நினைவோடு வாழ நம்மை நெறிப்படுத்தும் வழிமுறைகள் ஐந்து தருக.
 - ૐ இறைவனைத் தியானித்தல்
 - ૐ பக்தி
 - ૐ தனி மனித ஒழுக்கம்
 - ૐ பிராணிகளுக்கு உணவளித்தல்
 - ૐ உலகத்திற்குத் தீமை வராதபடி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல்

07. ஆன்ம தியானம் எனப்படுவது யாது?

ॐ நம்மைப் பற்றித் தியானித்தல் ஆன்ம தியானம் எனப்படும். அதாவது நாம் சரியான வழியில் நடக்கிறோமா? நாம் செய்வது சரியா? தவறா? ஏன் இந்தத் தவறைச் செய்தோம்? தவறுகளிலிருந்து விலகி நல்லபடி வாழ்வது எப்படி? என்றெல்லாம் தியானிப்பதாகும்.

08. சிவத்தியானம் எனப்படுவது யாது?

ॐ கடவுளைப் பற்றித் தியானிப்பது சிவத் தியானமாகும். அதாவது கடவுளின் பெருமைகளையும் எல்லையற்ற பெருமைமிக்க கடவுள் எம் மீது காட்டும் கருணையையும் நினைத்து மனமுருகும் அத்தியானமே சிவத்தியானமாகும்.

09. கடவுள் வழிபாடு எப்போது முழுமை பெறுவதாக அமையும் என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?

ॐ நாம் வாழும் ஒழுக்கமான வாழ்வினாலேயே கடவுள் வழிபாடு முழுமை பெறுகிறது.

10. நாம் நமது வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும்?

ॐ உலகத்துக்குத் தீமை நிகழாதபடி நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

## 03. சைவ விழுமியங்கள்

01. ஈகை எனப்படுவது யாது?

ௐ ஈகை என்ற சொல் கொடை என்று பொருள்படுவதாகும். அறங்களுள் எல்லாம் மேம்பட்ட அறமாக ஈகை கருதப்படுகிறது.

02. திருவள்ளுவர் எது குறித்து தனது கோப உணர்ச்சியை வெளிப்படுத்துகிறார்?

ௐ நமது அறப் பாரம்பரியம் ஒருவன் பிறரிடம் இருந்து வாழவேண்டிய நிலையில் இருப்பதை சமூக அநீதியாகவே கருதுகின்றது. அத்தகைய நிலை குறித்து தன் கோப உணர்ச்சியை மிகக் கடுமையாக வெளிப்படுத்துகிறார்.

03. இரத்தல், ஈகை என்பன பற்றிப் புறநானூறு கூறுவன யாவை?

ௐ இரந்து வாழும் நிலை மிகத் தாழ்வானதே. ஆனால் யாரும் தம்மிடம் இரந்த போது, இல்லை என்று கைவிரிப்பது அதைவிடத் தாழ்வானதாகும்.

ௐ உலகத்திலேயே மிகக் கொடிய துன்பம் பசி, "பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்" அத்தகைய பசியைப் பொறுத்துக் கொள்வதென்பது தவம் செய்பவர்களிடம் காணப்பெறும் ஆற்றலாம். ஆனால், பசியால் வருந்துபவர்களுடைய பசியைத் தம் ஈகை மூலம் போக்குபவருடைய ஆற்றலோடு ஒப்பிடுமிடத்து அந்தத் தவ ஆற்றலானது இரண்டாம் நிலையில் வைக்கத்தக்கதாகப் பெருமை குன்றி விடுகின்றது.

04. "ஆற்றுவார் ஆற்றல்.." எனும் குறட்பாவின் கருத்தை விளக்குக.

ௐ தவ வலிமை உடையவரின் வலிமை பசியைப் பொறுத்துக் கொள்ளலாகும். அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதாகும்.

05. "இயல்வது கரவேல்" என்ற கூற்றின் மூலம் விளங்கிக் கொள்வது யாது?

ௐ எம்மால் இயன்றதை இல்லை என்று கூறாது கொடுக்க வேண்டும்.

06. ஒப்புரவு என்றால் என்ன?

ௐ தனி மனிதருக்கன்றி சமூகத்தின் தேவையறிந்து செய்யும் அறச் செயல்கள் ஒப்புரவு ஆகும்.

07. திருவள்ளுவர், ஒப்புரவாளர் செய்யும் உபகாரத்தை மழையோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளதன் பொருத்தப்பாடு யாது?

ௐ மழை என்பது தனி மனிதருக்காகப் பெய்வதில்லை. அது எல்லோருக்கும் பொதுவாகப் பெய்கிறது. இதுபோலவே ஒப்புரவாளனும் பிரதி பலன் எதனையும் எதிர்பாராது பொது நன்மைகளைச் செய்வதால் ஒப்புரவாளர் மழைக்கு ஒப்பிடப்படுகின்றார்.

08. ஊருணி, பயன்மரம், மருந்து மரம் என்று திருவள்ளுவர் யாரைப் புகழ்ந்துரைத்து உள்ளார்?

ௐ ஒப்புரவாளரை

09. அவ்வாறு புகழ்ந்துரைத்தமையின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

ௐ உண்மையை உணர்ந்து உலகத்துக்கு உபகாரியாக வாழும் வாழ்க்கையுடையவர்கள் செல்வந்தர்கள் மாத்திரமல்லாது உண்மை உணர்ந்த அறிவாளிகளும் ஆவர். ஏனெனில் அவர்களது செல்வம் ஊரில் உள்ள சகலருக்கும் பயன்படுத்தப்படுவதால் அவ்வாறு புகழ்ந்துரைக்கப்படுகின்றனர்.

10. திருவள்ளுவர், ஒப்புரவாளனைப் பேரறிவாளன் எனப் பெருமைப்படுத்தியமை பொருத்தமானதா? விளக்கம் தருக.

ௐ ஆம், ஏனெனில் ஒப்புரவாளன் செல்வம் அழியாதபடி மாத்திரமல்ல, அது புண்ணியமாகப் பெருகும்படி சேமித்து வைக்கும் உண்மை அறிவாளியாக விளங்குவதாலாகும்.

## 04. காலக் கணிப்பும் பஞ்சாங்கமும்

01. ஆண்டுச் சுற்றுவட்டத்தில் முதல் ஆண்டு யாது? கடைசி ஆண்டு யாது? எத்தனை ஆண்டுகள் ஒரு சுற்று வட்டத்தில் உள்ளன?
- ॐ முதல் ஆண்டு - பிரபவம்
- ॐ கடைசி ஆண்டு - அட்சயம்
- ॐ 60 ஆண்டுகள்

02. வரலாற்று நிகழ்வுகளைச் சுட்டுவதற்கு வசதியாக எமது முன்னோர் கையாண்ட ஆண்டு முறைகள் யாவை?
- ॐ சாலிவாகன சகாப்தம்
- ॐ விக்கிரம சகாப்தம்
- ॐ கொல்லம் சகாப்தம்

03. மாதம் எனப்படும் காலப்பகுதி யாது?
- ॐ சூரியன், இராசி மண்டலத்தில் உள்ள 12 இராசிகளுள் ஒரு இராசியிற் பிரவேசிப்பது முதல், அந்த இராசியை விட்டு விலகுவது வரையிலான காலப்பகுதியே சூரிய மானத்தில் ஒரு மாதமாகக் கொள்ளப்படுகின்றது.

04. வார நாட்கள் எவ்வாறு பெயரிடப்பட்டுள்ளன?
- ॐ இந்து மரபில் நவக்கிரகங்கள் எனப்படும் ஒன்பது கிரகங்களுள் இராகு, கேது என்னும் இரண்டும் சாயா (நிழல்) கிரகங்கள் எனப்படுவன. அந்த இரண்டும் தவிர்த்தும் ஏனைய கிரகம் ஒவ்வொன்றுக்கும் உரியதாக ஒவ்வொரு நாள் கொள்ளப்படுகின்றது.

உ-ம் ஞாயிறு (சூரியன்), திங்கள் (சந்திரன்)

05. திதிகள் எவ்வாறு கணிக்கப்படுகின்றன? எத்தனை திதிகள் உள்ளன?
- ॐ திதிகள், சந்திரன் வளர்வதையும் தேய்வதையும் அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுவதாகும்.
- ॐ 30 திதிகள்

06. சுக்கில பட்சம், கிருஷ்ண பட்சம் என்பவற்றை விளக்குக.
- ॐ சுக்கில பட்சம் - சந்திரன் வளரும் காலம் சுக்கில பட்சம் (வெண் பக்கம்) ஆகும்.
- ॐ கிருஸ்ண பட்சம் - சந்திரன் தேயும் காலம் கிருஷ்ண பட்சம் (கரும்பக்கம்) ஆகும்.

07. கரணம் என்பது யாது? எத்தனை கரணங்கள் உள்ளன?
- ॐ ஒரு திதியின் அரைப் பங்கு கரணம் ஆகும். அதாவது ஒரு திதியின் முற்பாதி ஒரு கரணம். பிற்பாதி மற்றொரு கரணம். ஒரு திதிக்கு இரண்டு கரணங்கள் என்ற வகையில் முப்பது திதிகளுக்கு 60 கரணங்கள் அமைகின்றன.

08. நட்சத்திரங்கள் எத்தனை? உதாரணங்கள் தருக.

ௐ 27 நட்சத்திரங்கள்

| | | |
|---|---|---|
| அஸ்வினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |
| ரோஹினி | அத்தம் | திருவோணம் |
| மிருகசீரிடம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுசம் | உத்திரட்டாதி |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி |

09. ஒரு இராசி எவ்வாறு கணிக்கப்படுகிறது? எத்தனை ராசிகள் உள்ளன?

ௐ நட்சத்திரம் 27 என்று பார்க்கும் போது நட்சத்திரம் ஒவ்வொன்றும் நான்கு சம கூறுகளை (பாதங்களை) உடையன. அதாவது 2 ¼ நட்சத்திரங்களின் தொகுதி ஒரு இராசியாகும்.

உ-ம் மேடராசி – அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்

ௐ 12 ராசிகள்

10. பஞ்சாங்கம் என்பதன் பொருள் யாது?

ௐ வாரம், திதி, நட்சத்திரம், கரணம், யோகம் என்னும் 5 அம்சங்களையும் கொண்டமைந்ததால் (பஞ்ச + அங்கம்) பஞ்சாங்கம் என்ற பெயர் உண்டானது.

11. பஞ்சாங்கம் பார்க்கும் சந்தர்ப்பங்கள் எவை?

ௐ சமய அனுட்டானங்களைச் செய்ய உதவும்.

ௐ பண்டிகைகள், விழாக்களைக் கொண்டாடுவதற்குரிய காலத்தை (முகூர்த்தத்தை) அறிய உதவும்.

## 05. விரதங்கள்

01. திருவெம்பாவை விரதம் அனுட்டிக்கப்படும் காலம் யாது?
   ௐ மார்கழி மாதத்து வளர்பிறை ஆறாம் திதியில் திருவெம்பாவை விரதம் ஆரம்பமாகும். அதனை அடுத்து வரும் முழுமதித் தினத்தன்று (பத்தாம் நாள்) விரதம் நிறைவு பெறும்.

02. "ஆருத்ரா தரிசனம்" என்றால் என்ன?
   ௐ திருவாதிரையன்று இடம்பெறும் நடேசர் அபிஷேக தரிசனம் ஆருத்ரா தரிசனம் எனப்படும்.

03. மார்கழித் திருவாதிரை உற்சவம் சிவன் கோயில்களில் சிறப்பாக இடம்பெறுவதன் காரணம் யாது?
   ௐ சிவனுக்குரிய நட்சத்திரம் திருவாதிரையாக இருப்பதாலும் சிவ விரதங்களுள் மார்கழித் திருவாதிரை விசேடமானதாகவும் இருப்பதால் இவ் உற்சவம் சிவன் கோயில்களில் சிறப்புப் பெறுகின்றது.

04. வரலட்சுமி விரதம் எப்போது அனுட்டிக்கப்படுகிறது?
   ௐ ஆவணி மாதத்து பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமையன்று.

05. வரலட்சுமி விரதம் அனுட்டிக்கும் நோக்கம் யாது?
   ௐ பெரும்பாலும் சுமங்கலிப் பெண்களால் இவ்விரதம் அனுட்டிக்கப்படும். செல்வங்கள் அனைத்தையும் அருளையும் வேண்டி நிற்பதோடு மாங்கல்ய பலம், வளமான வாழ்வு முதலியவற்றைப் பெறவும் அனுட்டிப்பர்.

06. அஷ்ட லட்சுமிகளும் யாவர்?
   ௐ ஆதிலட்சுமி, தனலட்சுமி, தானிய லட்சுமி, வித்யா லட்சுமி, வீர லட்சுமி, கஜலட்சுமி சந்தான லட்சுமி, விஜய லட்சுமி

07. கார்த்திகை விரதம் எத்தெய்வத்திற்குரியது?
   ௐ முருகப் பெருமானுக்குரியது

08. கார்த்திகை விளக்கீடு விசேடமாக இடம்பெறும் - அக்கினித் தலம் என்று சிறப்பிக்கப்படும் தலம் யாது?
   ௐ திருவண்ணாமலை

09. சொக்கப்பானை, கொளுத்துதல் மூலம் நினைவு கூரப்படும் புராண சம்பவம் எது?
   ௐ இறைவனின் சோதிரூபத்தைக் காண விழைந்த மக்களின் வெளிப்பாடே சொக்கப்பானை கொளுத்துதல் ஆகும். அதாவது பிரமா, விஷ்ணு என்போரின் மனவிருளை நீக்கிய அந்தச் சோதிவடிவை நினைவு கூரும் முகமாக சொக்கப்பானை எரித்தலாகும்.

10. குமராலய தீபம், சர்வாலய தீபம், விஷ்ணுவாலய தீபம் என்பன பற்றி விளக்குக.
   ௐ திருக்கார்த்திகை நாள் அன்று குமராலயத் தீபத் திருநாளாகவும் சர்வாலயத் தீபத் திருநாளாகவும் அமையும். அன்று வீடுகளிலும் கொண்டாடப்படும். ஆனால் அதற்கு அடுத்த நாள் ரோகிணி நட்சத்திரத்தன்று அமைவது விஷ்ணுவாலய தீபம் ஆகும். சில காலங்களில் எல்லாம் ஒரே நாளிலும் அமையலாம்.

11. கார்த்திகை விளக்கீடு எப்போது கொண்டாடப்படுகின்றது?
   ௐ கார்த்திகை மாதப் பூரணையன்று கார்த்திகை விளக்கீடு கொண்டாடப்படுகின்றது.

## 06. சைவ சாதனங்கள்

01. சைவசாதனங்கள் எனப்படுபவை யாவை? அவை சைவ சாதனங்கள் எனப் பெயர் பெறுவதற்கான காரணம் யாது?
   - ௐ விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம்
   - ௐ ஏனெனில் இவை ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவும் கருவிகளாக விளங்குவதனால் அவை சைவ சாதனங்களாக அமைகின்றன.

02. விபூதி அணியும் முறைகள் யாவை?
   - ௐ உத்தூளனம்
   - ௐ திரிபுண்டரம்

03. திருநீற்றுக்கு வழங்கப்படும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
   - ௐ விபூதி
   - ௐ பசிதம்
   - ௐ பஸ்மம்
   - ௐ இரட்சை
   - ௐ ஷாரம்

04. திருநீற்றின் மகிமையை உணர்த்திய சிவனடியார்கள் யாவர்?
   - ௐ சம்பந்தர்
   - ௐ அப்பர்
   - ௐ மெய்ப்பொருள் நாயனார்

05. உருத்திராக்கம் என்பதன் பொருள் யாது?
   - ௐ உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். (அக்கம் - கண்)

06. உருத்திராக்கம் எதனை நினைவூட்டும் சாதனமாக உள்ளது?
   - ௐ ஆன்மாக்களிடம் இறைவன், கொண்டுள்ள பெருங்கருணையச் சதா நினைவூட்டும் சாதனமாக உருத்திராக்கம் விளங்குகின்றது. (இதனை அணிதல் அவரது திருவருட் பேற்றிற்கு அடையாளமாக இது விளங்கும்)

07. உருத்திராக்கம் அணிவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
   - ௐ இப்பிறவியில் உடல் நலமும் செல்வ வளமும் நீண்ட ஆயுளும் கிட்டும். மறுமையில் அடியிணையில் மாறா இன்பம் வந்தெய்தும்.

08. அகத்தே அணியும் சிவசின்னம் யாது?
   - ௐ பஞ்சாட்சரம் என்னும் மந்திரமாகும்.

09. தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம் எனப்படுபவை யாவை?
   - ௐ தூல பஞ்சாட்சரம் - நமசிவாய
   - ௐ சூக்கும பஞ்சாட்சரம் - சிவாயநம

10. பஞ்சாட்சரத்தின் பெருமையைக் கூறும் பதிகங்களை அருளியவர்கள் யாவர்?
   - ௐ திருஞானசம்பந்த சுவாமிகள்
   - ௐ திருநாவுக்கரசு சுவாமிகள்
   - ௐ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

11. திருநீற்றை திரிபுண்டரமாக அணிவதற்குரிய உறுப்புக்கள் எவை?
   - ௐ உச்சி, நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாள்கள், புயங்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து எனும் 16 உறுப்புகளும் அமையும்.

12. திருநீறு வேறு பெயர்கள் கொண்டு அழைப்பதற்கான காரணம் யாது?
   - ௐ விபூதி – திருநீறானது தன்னைத் தரித்தவர்களுக்கு மேலான செல்வத்தைத் தருவதால்
   - ௐ பசிதம் - ஒளியைக் கொடுப்பதனால்
   - ௐ பஸ்மம் - பாவங்களை எரித்து நீறாக்குவதால்
   - ௐ இரட்சை – தன்னைத் தரித்த ஆன்மாக்கள் எல்லாவற்றையும் இரட்சிப்பதால்
   - ௐ ஷாரம் - உயிர்களது மும்மலங்களையும் நீக்குவதால்

13. உருத்திராக்கம் தரிக்கும் சந்தர்ப்பங்கள் எவை?
   - ௐ சந்தியாவந்தனம், சிவபூசை, செபம், தேவார திருவாசக பாராயணம், புராண படனம், சிவாலய தரிசனம்

## 07. அபரக் கிரியை

01. அபரக் கிரியை என்றால் என்ன?

- ௐ ஆன்மாவானது சரீரத்தை விட்டு நீங்கிய பின்னர் அதன் நன்மை கருதி செய்யப்படும் கிரியை அபரக்கிரியை எனப்படும். (அபரம் - பிந்தியது, கிரியை – செயல்)

02. அபரக் கிரியை செய்யப்படுவதன் நோக்கம் யாது?

- ௐ பிதிர்கள் (இறந்த மூதாதையரின் ஆத்மாக்கள்) நற்கதி அடைய வேண்டும் எனும் நோக்கிலே செய்யப்படுகின்றது)

03. அஸ்திசஞ்சயனம் என்றால் என்ன?

- ௐ பூதவுடல் தகனம் செய்யப்பட்டால் தகனம் செய்த இடத்திலுள்ள சாம்பலை விதி முறைப்படி சேகரித்து, அதைப் புண்ணிய நீர் நிலையில் கரைத்து விடும கிரியையே அஸ்திசஞ்சயனம் ஆகும்.

04. அந்தியேஷ்டி என்பதன் பொருள் யாது? அது எப்போது செய்யப்படும்?

- ௐ அந்தியேஷ்டி என்றால் இறுதியாகச் செய்யப்படும் யாகம் என்பது பொருளாகும்.
- ௐ ஒருவர் இறந்து (பெரும்பாலும்) 30 ஆம் நாளில் செய்யப்படும்.

05. சிரார்த்தம் என்பதன் பொருள் யாது? அது எப்போது செய்யப்படும்?

- ௐ சிரார்த்தம் என்றால் சிரத்தையுடன் செய்யப்படுவது என்பது பொருளாகும்.
- ௐ ஒருவர் இறந்த பின்னர் ஆண்டு தோறும் குறித்த திதியில் செய்யப்படும்.

06. மகாளய பட்ச காலம் யாது? அக்காலத்தில் செய்ய வேண்டியவை யாவை?

- ௐ புரட்டாதி மாத அபரபக்கப் பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம் வரையாகும்.
- ௐ விரதம் அனுட்டித்து பிதிர்தர்ப்பணம் செய்தல், தான தர்மம் செய்தல்.

## 08. ஆகமம்

01. சிவாகமங்கள் யாரால் அருளப்பட்டவை? திருமுறை ஆதாரம் இரண்டு தருக.
   ௐ சிவபிரானால் அருளப்பெற்றவை.
   ௐ திருவாசகம்
      ''மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
      சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்''
   ௐ பெரிய புராணம்
      ''நாயகனார் முன்னம் உரைத்த ஆகமநூல்''

02. சிவபிரானின் திருமுகங்கள் எத்தனை? அவை எவை?
   ௐ ஐந்து
   1. சத்தியோஜாதம்
   2. வாமதேவம்
   3. அகோரம்
   4. தத்புருஷம்
   5. ஈசானம்

03. அத்திருமுகங்களில் இருந்து வேதங்களும் ஆகமங்களும் தோன்றியமை பற்றி முன்வைக்கப்படும் கருத்துக்கள் எவை?
   ௐ வேதங்களும், ஆகமங்களும் இறைவனால் அருளப்பட்டவை என்று கூறப்படுகின்றது.
   ௐ ஆகமங்கள் சிவபிரானால் தேவிக்குக் கூறியவை என்று கூறப்படுகின்றது என்றும் சிவபெருமானே ஆகம வடிவாக விளங்குகிறான் என்றும் கூறப்படுகின்றது.

04. சிவாகமங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?
   ௐ சிவாகமங்கள்
   ௐ உபாகமங்கள்

05. பஞ்சராத்திரம், தந்திரம் என்பவை எவற்றைக் குறித்து நிற்கின்றன?
   ௐ பஞ்சராத்திரம் - வைணவ நெறிக்குட்பட்ட ஆகமங்கள்
   ௐ தந்திரம் - சாக்த நெறிக்குட்பட்ட ஆகமங்கள்

06. ஆகமம் என்ற சொல்லின் பொருளைத் தருக.
   ௐ தொன்று தொட்டு வரும் அறிவு அல்லது இறைவனை அடைவதற்கான வழியைக் கூறும் ஞான நூல் என்ற பொருளாகும்.

07. சிவாகமங்கள் எத்தனை? அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக.
   ௐ 28
   ௐ காமிகம், வாதுளம்

08. உபாகமங்கள் எத்தனை? அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக.
   ௐ 207
   ௐ நரசிங்கம் (மிருகேந்திரம்), விசிவான்மிகம்

09. சிவபெருமான் சிவாகமங்களை யாருக்கு உபதேசித்தார்? யாருக்கு உபதேசித்தார்?
   ௐ தேவிக்கு உபதேசித்தார்.

10. ஆகமம், சிறப்பு நூல் என்று அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
   - ௐ சைவம், வைணவம் முதலான உட்பிரிவு ஒவ்வொன்றுக்கும் வேறுவேறான ஆகமங்கள் உள்ளன. அதனாலேதான் ஆகமங்கள் சிறப்பு நூலாகக் கொள்ளப்படுகின்றது.

11. ஆகமங்கள் குறிப்பிடும் 4 பாதங்களும் எவை?
   - ௐ சரியை
   - ௐ கிரியை
   - ௐ யோகம்
   - ௐ ஞானம்

12. ஆகமங்கள் நான்கு பாதங்களிலும் எவற்றை விளக்குகிறது.
   - ௐ சரியாபாதம் - தொண்டுகள், சமயாசாரங்கள்
   - ௐ கிரியாபாதம் - மந்திர உச்சாடனம், சந்தியாவந்தனம், பூசை, செபம், சமய விஷேஷ நிருவாண ஆசாரிய அபிஷேக தீட்சைகள்
   - ௐ யோகபாதம் - அஷ்டாங்க சிவயோகம்
   - ௐ ஞானபாதம் - முப்பொருள் உண்மை

# 09. தோத்திரப் பாடல்கள்

## 1. திருப்புகழ்

01. 'உம்பர்தரு' எனும் திருப்புகழில் விநாயகப் பெருமான் எவ்வாறெல்லாம் விளிக்கப்படுகிறார்?
   - ௐ தம்பியாகிய முருகப் பெருமானுக்காக (முருகனிடம் வள்ளி வந்து அடைவதற்காக யானை வடிவிலே) காட்டை அடைந்தவர்.
   - ௐ தந்தையை வலம் செய்வதற்குப் பரிசாக, அவரால் அருளப்பட்ட மாங்கனியைக் கையில் கொண்டவர்.
   - ௐ அன்புடைய அடியவர்களுக்குரிய நிலையான பொருள்.
   - ௐ ஐந்து கரங்களையும் ஆனை முகத்தையும் கொண்ட பெருமான்.

02. அருணகிரிநாதர் விநாயகரிடம் வேண்டுவது யாது?
   - ௐ தேவலோகத்துக் கற்பகதரு, காமதேனு, சிந்தாமணி என்பவற்றைப் போல என்னுடைய உள்ளமும் (பிறர் கேட்பதையெல்லாம் கொடுக்கின்ற) இரக்க சிந்தை உடையதாகி, ஒளிபொருந்திய பாற்கடலில் தோன்றிய இனிய அமுதத்தைப் போன்ற ஞான உணர்வு ஊறப்பெற்று, மெய்ஞ்ஞான இன்பமாகிய சாற்றினை எப்போதும் பருகி மகிழ்வதற்கு அடியேனுடைய உயிர்க்கு ஆதரவு தந்தருள்வாயாக! என்கிறார்.

03. நாதரருளிய குமரேசா!
குறமகள் மணவாளா!
மாயனரிதிரு மருகோனே! ஆகிய தொடர்புகளை விளக்குக.

   - ௐ நாதரருளிய குமரேசன் - சிவனின் மகன்
   - ௐ குறமகள் மணவாள் - வள்ளி நாயகியின் மணவாளன்
   - ௐ மாயனரி திரு மருகோன் - திருமாலின் (இராமனின்) திருமகன்

04. 'பாதிமதி' எனும் திருப்புகழில் முருகப்பெருமானிடம் அருணகிரிநாதர் வேண்டும் வரம் யாது?
   - ௐ யமன், அடியேனை நெருங்கமுடியாத வகையில் உனது திருப்பாதம் இரண்டினையும் வழிபட்டிருக்கும் பேற்றினை எனக்கு அருள்வாயாக என்கிறார்.

05. திருப்புகழின் சிறப்புக்கள் மூன்று தருக.
   - ௐ கருத்தாழம், சொல்லழகு, இசைத் திறன், தாளச் செறிவு மிக்கது.
   - ௐ பக்திச் சுவைமிக்க பாடப்பெற்ற சந்தப் பாடல்களாக இருக்கின்றது.
   - ௐ பஞ்ச புராணம் ஓதிய பின்பு பாடப்படும் ஒரு பாடலாக இது விளங்குகின்றது.

06. திருப்புகழ் யாரால் பாடப்பெற்றது?
   - ௐ அருணகிரிநாதரால்

07. வேண்டியவர்களுக்கு வேண்டிய யாவற்றையும் கொடுக்கும் பொருட்கள் எவை?
   - ௐ கற்பக விருட்சம்
   - ௐ காமதேனு என்னும் பசு
   - ௐ சிந்தாமணி

08. சீதைமேல் காமுற்றவன் யார்?
   - ௐ சயந்தன்

09. அயன் என்பவன் யார்?
   - ௐ பரமன்

10. 'உம்பர்தருத் தேனுமணிக்' எனும் பாடல் யாரைச் சிறப்பிக்கின்றது? இப்பாடல் காணப்படும் தோத்திரப் பாடல் எது?
   - ௐ விநாயகரை
   - ௐ திருப்புகழ்

## 2. ஆழ்வார் பாசுரங்கள்

(திருமாலை, திருவாய்மொழி)

## 3. அபிராமி அந்தாதி

01. திருவரங்கப் பெருமானின் அழகை, தொண்ரடிப் பொடியாழ்வார் எவ்வாறு வர்ணித்துள்ளார்?
   - ௐ பச்சை நிறத்தையுடைய பெரியதொரு மலைபோன்ற திருமேனியையும் பவளத்தை ஒத்த திருவாயையும், தாமரைப்பூப் போன்ற சிவந்த திருவிழிகளையும் உடைய அச்சுதன்.
   - ௐ தேவர்களுள் சிறந்தவன்
   - ௐ ஆயர்குலக் கொழுந்து
   
   இவை 'பச்சைமா மலை போல் மேனி' எனும் பாடலில் குறிப்பிடப்படுகிறது.

02. தொண்டரடிப் பொடியாழ்வாருக்கு இன்பம் தருவது எது?
   - ௐ திருவரங்கநாதனை (திருமாலை) புகழ்ந்து பாடி அன்பு செலுத்துவதே இன்பம் தருவதாகக் கூறுகிறார்.

03. நம்மாழ்வார் தனது மகள் எவற்றிலெல்லாம் திருமாலைக் காண்பதாகப் பாடியுள்ளார்?
   - ௐ தான் உண்ணுகின்ற சோறு, அருந்துகின்ற நீர், தின்னுகின்ற வெற்றிலை

04. அன்னை அபிராமியின் திருக்கோலத்தை எடுத்துக்காட்டும் தொடர்கள் மூன்று தருக.
   - ௐ தாயாக விளங்குபவளும் அழகுக் கொடி போன்றவளும் ஆவாள்.
   - ௐ அண்டசராசரம் யாவற்றையும் தோற்றுவித்தாள்.
   - ௐ திருக்கரத்திலே பாசம், அங்குசம், கரும்புவில் என்பவற்றைக் கொண்டவள்.
   - ௐ மூன்று திருவிழிகளைக் கொண்டவள்.

05. அம்பிகையின் கடைக்கண் பார்வை, அடியார்க்கு எவற்றையெல்லாம் நல்கும்?
   - ௐ உண்மை அன்பர்களுக்கு செல்வம், கல்வி ஒரு போதும் சோர்ந்து விடாத உறுதியான மனம், தெய்வீகமான தோற்றம், நெஞ்சில் வஞ்சக எண்ணம் இல்லாத (உண்மையான) சுற்றம் முதலான நல்ல விடயங்கள் யாவற்றையும் தரும்.

06. விஷ்ணுவை நோக்கி ஆழ்வார்களால் பாடப்பெற்ற நூல் எது?
   - ௐ நாலாயிர திவ்விய பிரபந்தம்

07. ‘பச்சைமா மலைபோல் மேனி..’ எனும் பாடலைப் பாடிய ஆழ்வார் யார்?
ௐ தொண்டரடிப் பொடியாழ்வார்
(திருமாலை எனும் நூலில்)

08. “உண்ணும் சோறு பருகும் நீர்..” எனும் பாடலைப் பாடிய ஆழ்வார் யார்?
ௐ நம்மாழ்வார்
(திருவாய் மொழிப் பாசுரம்)

09. “ஆத்தாளை எங்கள் அபிராம…” எனும் திருப்பாடலைப் பாடியவர் யார்? அதன் நூலையும் எழுதுக.
ௐ அபிராமிப்பட்டர்
அபிராமி அந்தாதி

10. “தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும்” எனும் திருப்பாடலைப் பாடியவர் யார்? அப்பாடல் இடம்பெற்ற நூலை எழுதுக.
ௐ அபிராமிப்பட்டர்
ௐ அபிராமி அந்தாதி

4. சகலகலா வல்லிமாலை
5. பராபரக்கண்ணி
6. கந்தலங்காரம்
7. கந்தபுராணம்

01. குமரகுருபர சுவாமிகள், சரஸ்வதி தேவியிடம் வேண்டுவன யாவை?
ௐ நூல்களை ஆராய்ந்து பெற்ற துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவை நிறைந்த மொழியாற்றலும் (என்னிடம்) பெருகும்படியாக ஆணையிட்டு அருள்வாயாக! என்கிறார்.

02. தாயுமான சுவாமிகள் அருளிய நூல் யாது? அந்நூல் அப் பெயரைப் பெற்றமைக்கான காரணம் யாது?
ௐ பராபரக்கண்ணி
ௐ அதிலுள்ள கண்ணிகள் (பாடல்கள்) யாவும் பராபரமே என்று முடிவதால் அந்நூல் அப்பெயர் பெற்றது.

03. அருணகிரிநாதர் தனது மனக் கவலையையும் உடல் நோயையும் போக்குவதற்கு செய்யத் தவறியவையாகக் குறிப்பிடப்படுவன யாவை?
ௐ (நான் எனது) மனக் கவலையையும் உடல் நோயையும் போக்குவதற்கு மயில்வாகனனாகிய முருகப் பெருமானை சிந்திக்கின்றேனில்லை! அவனுக்கு தொண்டு செய்கிறேனில்லை! (அவனது) தண்டை அணியப் பெற்ற சிறிய திருப்பாதத்தை வணங்குகிறேனில்லை! ஏதும் சொல்லி வாழ்த்துகிறேனில்லை! அவனைத் தரிசிக்கிறேனில்லை! உண்மையைப் பழகுகிறேனில்லை (நிலை நிறுத்துகிறேனில்லை) என்கிறார்.

04. கச்சியப்ப சிவாச்சாரியார் முருகப் பெருமானுக்கு எவ்வாறு வணக்கம் தெரிவிக்கிறார்?
ௐ ஆறு திருவதனங்களுக்கும் வணக்கம்!
ௐ அந்தத் திருவதனங்கள் பொழிகின்ற கருணைக்கு வணக்கம்!
ௐ எல்லோரும் வணங்கும்படியாக விளங்குகின்ற பன்னிரண்டு திருத்தோள்களுக்கும் வணக்கம்

- ௐ காஞ்சி மாநகரிலே மாமரத்தின் அடியிலே (ஏகாம்பரேஸ்வரர் சந்நிதானத்திலே) எழுந்தருளியிருக்கின்ற செவ்வேளாகிய முருகப் பெருமானது திருமலர்ப் பாதங்களுக்கு வணக்கம்.
- ௐ அத்தகையவனது (கொடியும் வாகனமுமாய் விளங்கும்) சேவலுக்கும் மயிலுக்கும் வணக்கம்.
- ௐ அவனது திருக்கரத்திலே பொலிகின்ற வேலாயுதத்திற்கு வணக்கம்.

05. "தூக்கும் பனுவல் துறை தோய்ந்த" எனும் பாடலைப் பாடியவர் யார்? அப்பாடல் காணப்படும் நூல் எது?
- ௐ குமரகுருபரர்
- ௐ சகலகலாவல்லி மாலை

06. "சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன்" என்ற பாடலைப் பாடியவர் யார்? அப்பாடல் காணப்படும் நூல் எது?
- ௐ அருணகிரிநாதர்
- ௐ கந்தரலங்காரம்

07. "மூவிரு முகங்கள் போற்றி.." எனும் பாடலைப் பாடியவர் யார்? அப்பாடல் காணப்படும் நூல் எது?
- ௐ கச்சியப்ப சிவாச்சாரியார்
- ௐ கந்தபுராணம்

08. காப்புச் செய்யுள் என்றால் என்ன?
- ௐ இலக்கியங்கள் பலவற்றில் முதலாவதாக அமையும் பாடலாகும். கவிஞர் தான் படைக்க நினைத்துள்ள நூலினை வெற்றிகரமாக முழுமையாக இயற்றி முடிக்க இறைவன் துணை வேண்டிப் பாடப்படும் பாடலாகும்.

# 10. மீட்சிப் படலம்

01. புராணங்கள் என்றால் என்ன?
ॐ வேத, ஆகம உண்மைகளை எளிய முறையில், சாதாரண மக்களும் விளங்கத்தக்க வகையில் கூறுவனவாக அமைவனவே புராணங்கள் ஆகும்.

02. கந்தபுராணத்தை தமிழில் பாடியவர் யார்? அவர் இந்நூலை பாடுவதற்கு ஆதாரமாக அமைந்த நூல் எது?
ॐ கச்சியப்ப சிவாச்சாரியார்
ॐ ஸ்காந்த புராணம்

03. கந்தபுராணம் எத்தனை காண்டங்களைக் கொண்டது? அவை யாவை?
ॐ 6 காண்டங்கள்.
1. சம்பவ காண்டம் (உற்பத்திக் காண்டம்)
2. அசுர காண்டம்
3. மகேந்திர காண்டம்
4. யுத்த காண்டம்
5. தேவ காண்டம்
6. தட்ச காண்டம்

04. மீட்சிப் படலம் அமைந்த காண்டம் எது?
ॐ யுத்த காண்டம்

05. மீட்சிப் படலம் என்ற பெயர் பெறக் காரணம் யாது?
ॐ தேவர்களைச் சிறைப்படுத்தி ஆணவத்தோடு உலவிய சூரபன்மனை வதம் செய்து, அவனை மயிலாகவும் சேவலாகவும் ஆட்கொண்டருளிய முருகப் பெருமான், தனது படைத் தலைவரான வீரவாகு தேவரிடம், தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து வருமாறு கட்டளையிட அவரும் அவ்வாறே அவர்களைச் சிறைமீட்டார். சிறையிலிருந்து சயந்தன் முதலான தேவர்கள் மீண்டமை முதலான செய்திகளைக்
கூறுவதால் இப்படலம் மீட்சிப் படலம் எனப் பெயர் பெற்றது.

06. தேவர்கள் எங்கே சிறை வைக்கப்பட்டிருந்தனர்?
ॐ மகேந்திரபுரியில்

07. தேவர்களைச் சிறை மீட்கச் சென்றவர் யார்?
ॐ வீரவாகு தேவர்

08. மீட்சிப் படலத்தில் இடம்பெறும் முருகப் பெருமானின் சிறப்புக்களை எடுத்துக் காட்டுக.
ॐ தேவர்களைச் சிறைப்படுத்தி ஆணவத்தோடு உலவிய சூரபன்மனை வதம் செய்து, அவனை மயிலாகவும், சேவலாகவும் ஆட்கொண்டமை.
ॐ மணி தூங்கிய பசுமையான பொன்மாலை போன்ற புள்ளியுடைய மயிலின் மீது எழுந்தருளி, நீண்ட வேல் ஏந்தியிருக்கின்றமை.

09. கச்சியப்பர் வாழ்ந்த இடம் எது?
ॐ காஞ்சிபுரம்

10. கச்சியப்பர் யாருடைய தவப்புதல்வர்?
ॐ காளத்தியப்ப சிவாச்சாரியார்

11. சைவ சித்தாந்த உண்மைகளைக் கதைவடிவில் உணர்த்தும் புராணம் எது?

ௐ கந்தபுராணம்

12. இந்திரனின் மகன் யார்?

ௐ சயந்தன்

13. கந்தபுராண மீட்சிப் படலத்தில் வரும் பாத்திரங்கள் சிலவற்றைத் தருக.

1. வீரவாகு தேவர்
2. சூரபத்மன்
3. இந்திரன்
4. சயந்தன்
5. தேவர்கள்
6. பூதகணங்கள்
7. மால் (விஷ்ணு)
8. அயன் (பிரமா)

## 11. குங்கிலியக்கலய நாயனார்

01. சைவ சமயத்தில் இறைவனை வழிபடுவதற்கு உரிய அடிப்படை மார்க்கங்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?
    - ௐ சரியை
    - ௐ கிரியை
    - ௐ யோகம்
    - ௐ ஞானம்

02. குங்கிலியக்கலய நாயனார் எங்கு அவதரித்தார்? அவர் செய்து வந்த தொண்டு யாது?
    - ௐ சோழ நாட்டில், திருக்கடவூரில்
    - ௐ திருவீரட்டானம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கு குங்கிலிய தூபம் இட்டு வழிபட்டார்.

03. தான் செய்து வந்த தொண்டில், கலயர் கொண்டிருந்த பற்றுறுதியை எடுத்துக் காட்டுவதாக அமைந்த சம்பவம் யாது?
    - ௐ தமது குடும்பம் வறுமையுற்ற போது மனைவியின் தாலியை விற்றுக் குங்கிலியம் வாங்கினார்.

04. கலயருக்கு இறைவன் எவ்வாறு அருள் புரிந்தார்?
    - ௐ கலயனாரின் வீட்டிற்கு பொன், பொருட்கள் அடங்கிய செல்வங்களை வழங்கினார்.

05. கலயரின் பெருமையை உலகம் எவ்வாறு உணர்ந்து கொண்டது?
    - ௐ திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்திலே பிரதிஷ்டை பண்ணப்பட்டிருந்த சிவலிங்கம் ஏதோ காரணத்தினால் சாய்ந்திருந்தது. அதை நிமிர்த்தும் முயற்சியில் அரசன், படை பட்டாளங்களுடன் முயன்றும் முடியவில்லை. அவ் இடத்திற்குச் சென்ற கலயனார் சிவலிங்கத்தின் மீது கயிற்றைக் கட்டி மறுமுனையைக் கழுத்தில் கட்டி சிவலிங்கத்தை நிமிர்த்தினார்.

06. சம்பந்தர், அப்பர் ஆகியோரோடு கலயருக்கு எவ்வாறு தொடர்பு ஏற்பட்டது?
    - ௐ கலயர் தொண்டு செய்து வரும் காலத்தில் சம்பந்தரையும், அப்பரையும் அழைத்துச் சென்று அவர்களுக்கு உபசாரம் செய்த போது.

## 12. கும்பாபிஷேகம்

01. சிவாகமங்கள் கூறும் கோயிற் கிரியைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
- ௐ 03 வகைப்படும்
- ௐ நித்திய கிரியைகள், நைமித்திய கிரியைகள், காமிய கிரியைகள்

02. நைமித்திய கிரியைகள் என்றால் என்ன? உதாரணம் தருக.
- ௐ குறித்த ஒரு காரண ;தினால் (நிமிர்த்தத்தால்) நிகழ்த்தப்படும் கிரியைகள் நைமித்திய கிரியைகள் எனப்படும். அதாவது விசேட கிரியைகள் நைமித்திய கிரியைகள் எனப்படும்.
- ௐ மகோற்சவம், கும்பாபிஷேகம்

03. கும்பாபிஷேகம் என்ற சொல்லின் பொருளைத் தருக.
- ௐ திருக்குடமுழுக்கு

04. பிரதிஷ்டை என்றால் என்ன?
- ௐ பிர – என்றால் நன்கு புலனாகும் படி என்றும், திஷ்ட – என்றால் நிற்றல் என்னும் பொருள் கொள்ளப்படும். அதாவது திருவுருவத்திலும் திருக்கோயிலிலும் வெளிப்பட நின்று அருள் புரிவதற்காக மூர்த்தியை நிலை நிறுத்துதல், தாபித்தல் ஆகும்.

05. திருக்குடமுழுக்கினை பெருஞ்சாந்தி எனக் குறிப்பிடுவதன் காரணம் யாது?
- ௐ ஒருவர் தன் நலத்தை மாத்திரமே கருதிச் செய்து கொள்ளும் சாந்திக் கிரியைகளைப் போலல்லாது, எல்லா உயிர்களும் குறைவின்றி வாழ்தற் பொருட்டு நிகழ்த்தப்படும் கிரியையாதலாற் குட முழுக்கானது பெருஞ்சாந்தி என்று போற்றப்படுகிறது.

06. பிரதிஷ்டையின் நான்கு வகைகளும் எவை? அவை பற்றிச் சுருக்கமாக விளக்குக.
- ௐ அநாவர்த்தனம் - ஆலயங்கள் இல்லாத இடத்தில் ஆலயத்தைப் புதிதாக அமைத்து அங்கு இறைவனைப் பிரதிஷ்டை செய்தல்.
- ௐ ஆவர்த்தனம் - நெடுங்காலமாக வழிபாடு நிகழ்ந்து வந்த ஆலயம் எதிர்பாராத (போர், இயற்கை அனர்த்தம் முதலானவை) அழிய நேர்ந்து மறைந்து போனவிடத்து, அதனை வெளிப்படுத்தியோ முன்போலப் புதிதாக ஒரு ஆலயத்தை நிர்மாணித்தோ இறைவனைப் பிரதிஷ்டை செய்தல்.
- ௐ புனராவர்த்தனம் - நித்திய நைமித்தியங்கள் நிகழ்ந்து வரும் வேளை ஆலயத்தின் உறுப்புக்களிலோ விக்கிரகங்களிலோ சேதம் ஏற்படுமிடத்து பாலஸ்தாபனம் செய்து ஆலயத்தைப் புனரமைத்து இறைவனைப் பிரதிஷ்டை செய்தல்.
- ௐ அந்தரிதம் - வழிபாடு நிகழ்ந்து வரும் ஆலயத்தில், இறப்பு முதலான அநர்த்தங்களோ தீட்டுக்குரிய சம்பவங்களோ இடம்பெறின் செய்யப்படும் பிராயச்சித்த வழிபாடு அந்தரித பிரதிஷ்டை எனப்படும்.

07. மண்டலாபிஷேகம் என்றால் என்ன?
- ௐ கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து அதன் அங்கமாக மண்டலாபிஷேகம் இடம்பெறும்.
- ௐ அபிஷேகம் ஒரு மண்டல காலம் இடம்பெறுவதால் அது மண்டலாபிஷேகம் எனப்படுகிறது. (48 தினங்கள் கொண்டது ஒரு மண்டலமாகும். சராசரிக் கணக்கின்படி 45 நாட்கள் ஒரு மண்டலம் என்று கொள்ளப்படுவதும் உண்டு)

08. பிரதிஷ்டா குருவிடம் காணப்பட வேண்டிய இலட்சணங்கள் யாவை?

ௐ பக்தி, அறிவு, ஒழுக்கம், மன உறுதி

09. நித்திய கிரியை என்றால் என்ன?

ௐ கோயில்களில் நித்தம் நிகழ்த்தப்படும் வழக்கமான பூசை வழிபாடுகளே நித்திய கிரியை எனப்படும்.
உ-ம் ஒருவேளை முதல் ஆறு வேளை வரை கோயில்களின் வசதிக்கேற்ப இடம்பெறும் கிரியைகளைக் குறிப்பிடலாம்.

10. பன்னிரண்டு காலப் பூசை இடம்பெறும் ஆலயம் எது?

ௐ திருச்செந்தூர்

11. கும்பாபிஷேகம் எவ்வாறு இடம்பெறுகின்றது?

ௐ திருக்குடத்து நீரை மூர்த்திகளுக்கும் விமான, கோபுர கலசங்களுக்கும் அபிஷேகம் செய்யும் கிரியையின் முக்கியத்துவம் கருதி அதனோடு சம்பந்தப்பட்ட கிரியைகள் அனைத்தும் பொதுவாக கும்பாபிஷேகம் எனக் கொள்ளப்படுகின்றது.

12. கும்பாபிஷேக கிரியைகளைச் செய்வதற்கு முன்னர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை எழுதுக.

ௐ அனுக்ஞை, கணபதி பூசை, வாஸ்து பூசை, வாஸ்து சாந்தி, முளையிடல், காப்புக் கட்டுதல், கும்பஸ்தானம்

13. காமிய கிரியை என்றால் என்ன?

ௐ நித்தியம், நைமித்திகம் இரண்டும் ஏதாவது பயனைக் கருதிச் செய்யப்படுமிடத்து அவை காமிய கிரியை எனப்படும்.

## 13. சமயகுரவர்

### 1. சுந்தரர்

01. சுந்தரர் அவதரித்த தலம் யாது?
    - ௐ திருமுனைப்பாடி நாட்டிலே, திருநாவலூரில்

02. சுந்தரரின் இயற்பெயர் யாது?
    - ௐ நம்பியாரூரர்

03. சுந்தரரை 'வன்றொண்டர்' என அழைத்தவர் யார்? அவ்வாறு அழைத்தமைக்கான காரணம் யாது?
    - ௐ சிவபெருமான்
    - ௐ கிழப் பிராமண வடிவில் வந்து தடுத்தாட் கொள்ளும் போது (சிவனை) நோக்கி வன்மை பேசியமையால் அவ்வாறு அழைக்கப்பட்டார்.

04. சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடிய சந்தர்ப்பத்தை விளக்குக.
    - ௐ ஒரு நாள் அவர் திருவாரூர்க் கோயிலினுள் புகும் பொழுது, முன்புறத்திலுள்ள தேவாசிரியன் என்னும் மண்டபத்திற் கூடியிருந்த அடியார்களைக் கண்டார். உடனே 'இந்த அடியார்களுக்கு நான் அடியனாகும் நாள் எந்நாள்?' என்று இறைவனிடம் கேட்டு வணங்கினார். அப்பொழுது இறைவன் அவருக்குக் காட்சி கொடுத்து அடியார்களின் பெருமையையும் அவர்களின் வரலாறுகளையும் அவருக்கு உணர்த்தி

      'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியும் எடுத்துக் கொடுத்தார். அப்போது சுந்தரர் திருத்தொண்டத் தொகையைப் பாடினார்.

05. சுந்தரர் திருக்கேதீச்சரப் பதிகத்தை எங்கிருந்து பாடியருளினார்?
    - ௐ இராமேச்சரம்

06. சுந்தரருக்கு கண்கள் குருடாகியதற்கான காரணம் யாது?
    - ௐ சங்கிலியாருக்குக் கொடுத்த உறுதிமொழி தவறியமையாலாகும்.

07. சுந்தரரைச் சேரமான் தோழர், தம்பிரான் தோழர் என அழைப்பதன் காரணம் யாது?
    - ௐ சேரமான் தோழர் - சுந்தரர் திருவாரூரில் வாழ்ந்த காலத்திலே, கழறிற்றறிவார் என்று சேரமான் பெருமாள் நாயானார் திருவஞ்சைக் களத்திலிருந்து சேர நாட்டை ஆண்டு வந்தார். அவர் சுந்தரரின் பக்தி மகிமையைக் கேட்டறிந்து திருவாரூருக்குச் சென்று அவருடன் நட்புக் கொண்டார். அதனால் சுந்தரருக்கு அப்பெயர் ஏற்பட்டது.

    - ௐ தம்பிரான் தோழர் - தோழமையோடு இறைவனை வணங்கி வந்ததினால் அவருக்குத் தம்பிரான் தோழர் எனப் பெயர் ஏற்பட்டது.

08. பின்வரும் பதிகங்கள் பாடப்பட்ட சந்தர்ப்பங்களை விளக்குக.
    1. "நீள நினைந்தடியேன்..." – குண்டையூரில் உள்ள நெல்லை திருவாரூருக்கு கொண்டு செல்ல ஆள் கிடைக்கவில்லை. இந்நிலைமையை குண்டையூர்க்கிழார் சுந்தரருக்குத் தெரிவித்தபோது சுந்தரர் இறைவனை நோக்கிப் பாடியமை.

    2. "தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்" – திருவாரூர்ப் பங்குனி உத்தரத் திருவிழாவிற்காகப் பரவையாருக்குக் கொடுப்பதற்கு சுந்தரருக்குப் பொன்

தேவைப்பட்டது. அவர் திருப்புகலூருக்குச் சென்று இறைவனிடம் குறை சொல்லி இரந்தார். ஆயினும் எதுவும் கிடைக்கவில்லை. அப்பொழுது ஒரு மடத்தில் செங்கற்களை தலையணையாக வைத்து உறங்கினார். பின்பு எழுந்து பார்த்த போது அவை பொன் கட்டிகளாக மாறியிருந்தது. அப்போது அதனைப் பாடினார்.

3. ‘‘மீளா அடிமை’’ – திருவாரூரை அடைந்த சுந்தரர், வன்மீக நாதரின் கோலத்தைக் காண்பதற்கு ஒரு கண் போதாமையால் மற்றக் கண்ணும் தந்தருள வேண்டும் என்னும் குறிப்போடு பாடினார்.

4. ‘‘எற்றான் மறக்கேன்’’ – குளக்கரையில் முதலையுண்ட பிள்ளையை மீட்பதற்கு திருப்புக்கொளியூர் அவிநாசிப் பெருமானை வணங்கிப் பாடினார்.

09. சுந்தரர் செய்த அற்புதங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.
- ॐ செங்கட்டிகளைப் பொன்கட்டிகளாக மாற்றியமை.
- ॐ முதலையிடமிருந்து பிள்ளையைக் காப்பாற்றியமை.

10. சுந்தரரின் பெற்றோர் பெயர் என்ன?
- ॐ தாய் - இசை ஞானியார்
- ॐ தந்தை – சடையனார்

11. சுந்தரரின் முதல் திருப்பதிகத்தையும் இறுதிப் பதிகத்தையும் எழுதுக.
- ॐ முதல் பதிகம் - ‘‘பித்தா பிறை சூடி…’’
- ॐ இறுதிப் பதிகம் - ‘‘தலைக்குத் தலைமைாலை..’’

## 2. மாணிக்கவாசகர்

01. வாதவூரருக்கு மாணிக்கவாசகர் என்ற திருநாமம் வந்தமைக்கான காரணம் யாது?
    - ௐ அவர் அருளிய திருப்பாடல்கள் யாவும் பொருள் பொதிந்த மணியான வாசகங்களாக அமைந்த காரணத்தால் மாணிக்கவாசகர் என்று பெயர் பெற்றார்.

02. பாண்டிய மன்னன் அவருக்குத் “தென்னவன் பிரமராயன்” என்ற பட்டத்தை ஏன் வழங்கினான்?
    - ௐ மாணிக்கவாசகரின் கலைத் திறன், கல்வியறிவு, ஒழுக்கம் ஆகியவற்றைப் பாராட்டிய பாண்டியன் அவருக்கு சிறப்புப் பெயரைச் சூட்டினான்.

03. இறைவன் மாணிக்கவாசகரை எங்கு, எவ்வாறு ஆட்கொண்டருளினார்?
    - ௐ திருப்பெருந்துறையில், குருந்தமர நிழலில் அடியார் புடைசூழ அருட்குரவராய் எழுந்தருளி சிவபெருமான் ஆட்கொண்டருளினார்.

04. பாண்டிய மன்னன் வாதவூரரைச் சிறையிலிட்டமைக்கான காரணம் யாது?
    - ௐ குதிரைகள் வரும் என்று கூறியும் நாட்கள் கழிந்தன. குதிரைகள் வரவில்லை. வாதவூரர் தன்னை ஏமாற்றிவிட்டதாகக் கருதிய அரசன் அவரைச் சிறையிலிட்டான்.

05. வைகையாறு ஏன் பெருக்கெடுத்தது?
    - ௐ பாண்டிய மன்னன் வாதவூரரை வைகை ஆற்றுச் சுடுமணலிலே நிறுத்தி நெற்றியில் கல்லேற்றி வருத்தியமையால்.

06. மாணிக்கவாசகர் அருளிச் செய்த பனுவல்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.
    - ௐ சிவபுராணம்
    - ௐ அம்மானை
    - ௐ திருவுந்தியார்
    - ௐ திருவெம்பாவை
    - ௐ திருச்சாழல்
    - ௐ திருத்தெள்ளேணம்
    - ௐ திருப்பொன்னூஞ்சல்
    - ௐ அன்னைப் பத்து

07. மாணிக்கவாசகர் திருக்கோவையாரை அருளிச் செய்த தலம் யாது? இந்நூலின் பாட்டுடைத் தலைவன் யார்?
    - ௐ சிதம்பரம் - தில்லைப் பெருமான் (சிவபெருமான்)

08. மாணிக்கவாசகரின் குருபூசைத் தினம் யாது?
    - ௐ ஆனி மகம்

09. மாணிக்கவாசகரின் பெற்றோரின் பெயர் என்ன?
    - ௐ தாய் - சம்புபாதாசிரியார்
    - ௐ தந்தை – சிவஞானவதியார்

10. மாணிக்கவாசகரின் வாழ்க்கை வரலாறு எதனை விளக்குகிறது?
    - ௐ அன்பு நெறியை சிறப்பாக விளக்குகின்றது.

11. மாணிக்கவாசகர் பிறந்த இடம் எது?
    - ௐ திருவாதவூர்

12. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?
    - ௐ ஜி. யூ. போப்

13. மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பேச வைத்த தலம் எது?
    - ௐ சிதம்பரம்

## 14. சந்தானகுரவர்

மறைஞான சம்பந்தர்
உமாபதி சிவாச்சாரியார்

01. மறைஞான சம்பந்தர் பிறந்த, வாழ்ந்த இடங்கள் எவை?
ௐ திருப்பெண்ணாகடத்தில் பிறந்து, சிதம்பரத்தில் வாழ்ந்தவர்.

02. "பட்ட கட்டையிற் பகற்குருடு போகிறது" எனக் கூறியவர் யார்? யாரைப் பார்த்துக் கூறினார்? ஏன் அவ்வாறு கூறினார்?
ௐ மறைஞான சம்பந்தர்
ௐ உமாபதி சிவாச்சாரியார்
ௐ ஆன்மீகவாதிகளுக்கு ஆடம்பர வாழ்க்கையால் ஆன்ம ஈடேற்றத்தைப் பெற முடியாது என்பதற்காக.

03. மறைஞான சம்பந்தரின் குரு யார்?
ௐ அருணந்தி சிவாச்சாரியார்

04. உமாபதி சிவாச்சாரியாரின், பக்குவ நிலை எவ்வாறு வெளிப்பட்டது?
ௐ ஒருநாள், புடைவை நெய்பவர்கள் வாழ்ந்த வீதியை அடைந்த மறைஞான சம்பந்தர், அவர்களிடம் கூழ் வாங்கி உண்டார். அவர்கள் வார்த்த கூழினைக் கையிலே ஏந்தி உண்ணும் போது, அவரது முழங்கை வழியே எச்சிற் கூழை அருகேயிருந்த உமாபதியார் ஏந்தி, பேரானந்தத்துடன் பருகினார். இதன் மூலம் இவரது அதிதீவிர பக்குவ நிலை வெளிப்பட்டது.

05. சித்தாந்த அட்டகம் என்றால் என்ன? அவற்றில் அடங்கும் நூல்கள் எவை?
ௐ மெய்கண்ட சாஸ்திரங்கள் 14 இல் உமாபதி சிவாச்சாரியாரால் இயற்றப்பட்ட 8 நூல்களும் சித்தாந்த அட்டகம் எனப்படும்.

ௐ சித்தாந்த அட்டக நூல்களாக

1. சிவப்பிரகாசம்
2. திருவருட் பயன்
3. வினாவெண்பா
4. கொடிக்கவி
5. நெஞ்சு விடுதூது
6. உண்மைநெறி விளக்கம்
7. போற்றிப் ப∴றொடை
8. சங்கற்ப நிராகரணம்

06. சிவஞான போதத்தின் சார்பு நூல் எது?
ௐ சிவப்பிரகாசம்

07. உமாபதி சிவாச்சாரியார் அருளிய நூல்களுள் சித்தாந்த அட்டகத்துள் அடங்காதவை எவை?
- ௐ கோயிற் புராணம்
- ௐ திருத்தொண்டர் புராண சாரம்
- ௐ சேக்கிழார் புராணம்
- ௐ திருமுறைகண்ட புராணம்
- ௐ திருப்பதிகக் கோவை
- ௐ பௌட்கராம வடமொழி வியாக்கியானம்

08. உமாபதி சிவாச்சாரியார் நிகழ்த்திய அற்புதங்கள் எவை?
- ௐ மார்கழிமாதக் கொடியேற்றத் திருவிழா ஒன்றிலே, ஏறாது நின்ற கொடியை கொடிக்கவி என்னும் பிரபந்தம் பாடி ஏறச் செய்தார்.

- ௐ பெற்றான் **சாம்பான்** என்னும் சிவ பக்தனுக்கு உமாபதி சிவாச்சாரியார் தீட்சை அளித்து நடராஜர் அருளால் முத்தி கொடுத்தருளினார்.

- ௐ தன்னைச் **சந்தேகித்த** பெற்றான் சாம்பானுடைய மனைவியும் **அரசன்** முதலாயினோருங் காணும்படியாக பரிபக்குவம் அடைந்திருந்த முள்ளிச் செடி ஒன்றுக்கும் முத்தி கொடுத்தருளினார்.

09. நமசிவாய தேசிகரின் பணி யாது?
- ௐ இவர் திருவாவடுதுறை ஆதீனத்தைத் தாபித்து, அவ்வாதீனத்தின் முதற்குருவாய் விளங்கினார்.

10. மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகியோரின் குருபூசைத் தினங்கள் யாவை?
- ௐ மறைஞான சம்பந்தர் - ஆவணி மாத உத்தர நட்சத்திரம்
- ௐ உமாபதி சிவாச்சாரியார் - சித்திரைமாத அத்த நட்சத்திரம்

11. கொற்றவன் குடி முதலியார் என அழைக்கப்பட்டவர் யார்?
- ௐ உமாபதி சிவாச்சாரியார்

12. உமாபதி சிவாச்சாரியாரின் கோயிற் புராணம் எவ்வாறு அரங்கேற்றப்பட்டது?
- ௐ உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய கோயிற் புராணம் அரங்கேற்றமுறாது பெட்டகத்துள் இருந்தது. நடராஜர் பெருமான், தாம் உமாபதியார் பெட்டகத்துக்குள் இருப்பதாக தில்லைவாழ் அந்தணர்களுக்கு அறிவித்து அவர்களைக் கொண்டு புராணத்தை அரங்கேற்றம் செய்வித்தருளினார்.

மெய்கண்ட சாஸ்திரங்கள் - 14

| | | |
|---|---|---|
| 1. | திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்த தேவர் |
| 2. | திருக்களிற்றுப் படியார் | திருக்கடவூர் உய்ய வந்த தேவர் |
| 3. | சிவஞான போதம் | மெய்கண்ட தேவர் |
| 4. | சிவஞான சித்தியார் | அருணந்தி சிவாச்சாரியார் |
| 5. | இருபா இருப.்.து | |
| 6. | உண்மை விளக்கம் | திருவதிகை மனவாசகங்கடந்த தேவர் |
| 7. | சிவப்பிரகாசம் | உமாபதி சிவாச்சாரியார் |
| 8. | திருவருட்பயன் | |
| 9. | வினா வெண்பா | |
| 10. | போற்றிப்ப.்.றொடை | |
| 11. | உண்மைநெறி விளக்கம் | |
| 12. | கொடிக்கவி | |
| 13. | நெஞ்சு விடுதூது | |
| 14. | சங்கற்ப நிராகரணம் | |

# 15. அருணகிரிநாதர்

01. அருணகிரிநாதர் வாழ்ந்த காலம் யாது?

ௐ கி.பி 15ம் நூற்றாண்டு

02. முருகப் பெருமான், அருணகிரிநாதரை எவ்வாறு ஆட்கொண்டார்?

ௐ அருணகிரியார் அருணாச்சலேஸ்வர ஆலயத்தின் கோபுரத்தின் உச்சிமேல் ஏறிக் குதித்தார். அப்போது முருகப் பெருமான் தோன்றி தனது திருக்கரங்களை தாங்கி அவரது நாவிலே "சரவணபவ" என்னும் சடாட்ஷர ஆறெழுத்து மந்திரத்தை பொறித்து உபதேசம் செய்தருளினார்.

ௐ சரவணவப – சடாட்ஷர மந்திரம்

03. மன்னன் பிரபுட தேவராஜன் அருணகிரியாரின் பெருமையை உலகுக்கு எவ்வாறு உணர்த்தினான்?

ௐ அருணகிரியாரின் காலத்தில் திருவண்ணமலையை ஆண்ட மன்னன் பிரபுட தேவராஜன். இவன் அருணகிரியாரிடம் பேரன்பு கொண்டிருந்தான். அதனால் அருணகிரி நாதர்மேல் சம்பந்தாண்டான் என்பவன் பொறாமை கொண்டான். அவனுக்கு அருணகிரியாரின் பெருமையை உணர்த்த நினைத்த மன்னன், முருகக் கடவுளை வரவழைக்குமாறு அருணகிரியாரிடம் வேண்டினான். அருணகிரியார் முருகனை நினைத்து "அதல சேடனார் ஆட, அகிலமேரு மீதாட" என்ற திருப்புகழைப் பாட, முருகப் பெருமான் திருவண்ணாமலைக் கோயில் வாசலுக்கு அருகேயுள்ள தூணிலே தோன்றிக் காட்சி கொடுத்தார்.

04. அருணகிரிநாதர் அருளிய பக்திப் பனுவல்கள் எவை?

| | |
|---|---|
| 01. | திருப்புகழ் |
| 02. | கந்தரலங்காரம் |
| 03. | கந்தரநுபூதி |
| 04. | கந்தரந்தாதி |
| 05. | வேல்விருத்தம் |
| 06. | மயில் விருத்தம் |
| 07. | சேவல் விருத்தம் |
| 08. | வேல் வகுப்பு |
| 09. | திருவெழுக் கூற்றிருக்கை |

05. அருணகிரிநாதரால் பாடப்பெற்ற ஈழத்துத் தலங்கள் எவை?

ௐ கதிர்காமம், திருகோணமலை, நல்லூர், கந்தவனக்கடவை

06. "வாக்குக்கு அருணகிரி" என அருணகிரிநாதர் போற்றப்படக் காரணம் யாது?

ௐ சொற்களை ஆளும் திறத்தால் அவ்வாறு சிறப்பிக்கப்படுகிறார்.

07. கந்தனுக்குச் சொற்களால் புனையப்பட்ட அலங்கார மாலையாக விளங்கும் நூல் எது?

ௐ கந்தரலங்காரம் - 101 பாடல்கள்

08. பக்தி அநுபவப் பூரிப்பைச் சுட்டும் நூல் எது?

ௐ கந்தரநுபூதி – 51 பாடல்கள்

09. கதிர்காமத் திருப்புகழ் ஒன்றை எழுதுக.

ௐ "இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சொற் குமரேசா கறையானைக் கிளையோனே
கதிர்காமப் பெருமானே"

10. அருணகிரி நாதரின் மறுபெயர்கள் எவை? (சிறப்புப் பெயர்கள்)

ௐ வாக்குக்கு அருணகிரி, ஸார்வபௌமடிண்டிமகவி, அஷ்ட பாஷா பரமேஸ்வரர்

## 16. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

01. இலங்கையில் யாருடைய ஆட்சிக் காலத்தில் நாவலர் பிறந்தார்?
ௐ ஆங்கிலேயரது ஆட்சிக் காலம்

02. நாவலர் பிறந்த கால இலங்கையின் சூழ்நிலை எத்தகையது?
ௐ ஆங்கில மொழியினதும், ஆங்கிலேயர் போற்றிய கிறிஸ்துவ மதத்தினதும் செல்வாக்குப் பெற்றிருந்ததோடு, சுதேச மதங்கள் செல்வாக்கிழந்து காணப்பட்டது.

03. கிறிஸ்துவ மதம் பற்றிய அறிவு நாவலருக்கு எவ்வாறு கிடைத்தது?
ௐ ஆங்கிலப் புலமையை வெஸ்லியன் மிசன் கல்லூரியில் பெற்றுக் கொண்ட பின்பு, கிறித்துவ வேதாகமத்தைத் தமிழிலே மொழி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்ட பார்சிவல் பாதிரியார் நாவலரின் உதவியைப் பெற்றுக் கொண்டார். அதனால் கிறிஸ்துவம் பற்றிய ஆழமான அறிவு நாவலருக்குக் கிடைத்தது.

04. நாவலர் நிறுவிய முதலாவது சைவப் பாடசாலையின் பெயர் யாது? அது எங்கு நிறுவப்பட்டது?
ௐ சைவப் பிரகாச வித்தியாசாலை
ௐ வண்ணார் பண்ணையில்

05. நாவலர் பிரசங்கம் செய்யத் தொடங்கியதன் நோக்கங்கள் யாவை? அவரின் முதலாவது பிரசங்கம் எங்கு இடம்பெற்றது?
1. கிறிஸ்துவ மத பிரசாரங்களுக்கு எதிரான கண்டனத்தைத் தெரிவித்தல்.
சைவத்தின் உண்மையை நிலை நிறுத்துதல்.
2. வண்ணார் பண்ணையிலுள்ள சிவன் கோயிலில் 1847.12.31அன்று இடம்பெற்றது.

06. நாவலர் அச்சியந்திர சாலை நிறுவியதன் பிரதான நோக்கங்கள் யாவை? அவர் இலங்கையில் நிறுவிய அச்சியந்திர சாலையின் பெயர் யாது?
1.பிரதான நோக்கங்கள்

- சமய நூல்களை வெளியிடல்.
- செய்யுள் வடிவிலே கிடந்த பல சைவ இலக்கியங்களை சாதாரண கல்வியறிவுள்ளவர்களும் படித்து விளங்கிக் கொள்ளும் நோக்கில் அவற்றை வசன நடையில் எழுதி வெளியிடல்.
- பிற சமயத்தவர்களின் கண்டனங்களுக்கு எதிரான கடும் கண்டனங்களைத் தெரிவித்தல்.
- அவரது காலத்தில் சைவ நடைமுறைகளில் காணப்பட்ட குறைபாடுகள் முதலியவற்றைக் கூறல்.

2.வித்தியானுபாலன யந்திரசாலை (1849இல்)

07. "நாவலர்" பட்டம் வழங்கிய ஆதீனம் யாது? அப்பட்டத்தை வழங்கியமைக்கான காரணம் யாது?
ௐ திருவாவடுதுறை ஆதீனம்
ௐ பிரசங்கத்தில் விதந்து அவ் ஆதீன முதல்வர் நாவலரின் நாவன்மையைப் பாராட்டியமையால் அப்பட்டத்தை வழங்கினார்.

08. சைவ மாணவர்களுக்காக நாவலர் ஆற்றிய பணிகள் யாவை?

ஓ் கல்வி நிலையங்கள் நிறுவியமை - இலங்கையில் வண்ணார் பண்ணையிலும் இந்தியாவில் சிதம்பரத்திலும் சைவப் பிரகாச பாடசாலைகள்.

ஓ் நூலாக்கப் பணிகளை மேற்கொண்டமை – பாலபாடம் 1ம், 2ம், 4ம் புத்தகங்கள், சைவ வினா விடை, இலக்கணச் சுருக்கம், நீதி நூல்கள்

09. நாவலர், செய்யுள் இலக்கியங்களை வசன நடையில் எழுதியமைக்கான காரணம் யாது?

ஓ் செய்யுள் வடிவிலே கிடந்த பல சைவ இலக்கியங்களை சாதாரண கல்வியறிவுள்ளவர்களும் படித்து விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் ஆகும்.

10. நாவலர் ஆற்றிய சமூகப் பணிகள் யாவை?

ஓ் யாழ்ப்பாணம் கரையூரில் வாழ்ந்த கத்தோலிக்க மக்கள், பேதி நோயின் தாக்கத்துக்கு ஆளாகி மடிவது கண்டு மனம் வருந்தி அது தொடர்பாக அரசாங்கத்துக்கு கடுமையான முறைப்பாட்டினை செய்தார்.

ஓ் 1877 இல் யாழ்ப்பாணத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அந்த வேலையில் உரிய கடமைகளைச் செய்யத் தவறிய அக்கால அரசாங்க அதிபர் துவைனம் அவர்களைக் கடுமையாக விமர்சித்தார். தாமே முயன்று மகா சபை ஒன்றினை உருவாக்கி, பொருள் சேர்த்து ஏழைகளின் பசிபோக்கும் பணியில் ஈடுபட்டார்.

ஓ் அரசாங்க உழியர்களின் ஊழல்கள் குறித்து துணிந்து எழுதி மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்தார்.

ஓ் இலங்கைச் சட்ட நிரூபண சபைத் தேர்தல் வந்த போது, தமிழர் பிரதிநிதியாக அமையப் பொருத்தமானவர் சேர். பொன். இராமநாதனை ஆதரித்துப் பேசி அவரது வெற்றிக்காக உழைத்தார்.

11. நாவலர் எப்போது இறைபதமடைந்தார்?

ஓ் 1879ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ம் திகதி

12. சைவ மக்களால் “ஐந்தாம் குரவர்” எனப் போற்றப்பட்டவர் யார்?

ஓ் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

13. நாவலரின் குருபூசைத் தினம் எது?

ஓ் கார்த்திகை மாத மக நட்சத்திரம்

14. “தமிழ் வசன நடையின் தந்தை” எனவும் “வசன நடை கைவந்த வல்லாளர்” என அழைக்கப்பட்டவர் யார்?

ஓ் ஆறுமுக நாவலர்

15. நாவலரால் பதிப்புச் செய்யப்பட்ட உரைநூல்கள் 02ஐ எழுதுக.

ஓ் சூடாமணி உரை

ஓ் சௌந்தர்யலகரி உரை

16. கிறிஸ்துவ மதப் பிரச்சாரத்திற்கு எதிராக நாவலர் வெளியிட்ட நூல்களுள் ஒன்றைக் குறிப்பிடுக.

ஓ் சைவ தூஷண பரிகாரம்

17. நாவலர் ஆற்றிய சமயப் பணிகளை எழுதுக.

- ௐ சைவப் பிரசங்கங்களை ஆற்றியமை
- ௐ புராண படனம் நிகழ்த்தியமை
- ௐ நூல்கள் வெளியிட்டமை
- ௐ கல்வி நிலையங்களை நிறுவியமை
- ௐ ஆலய புனருத்தாரணம் செய்தமை
- ௐ பண்ணிசை வளர்த்தமை
- ௐ சமயக் கண்டனம் செய்தமை

18. நாவலரின் பெற்றோர், பிறந்த இடம், பிறந்த காலத்தையும் குறிப்பிடுக.

- ௐ தாய் - சிவகாமி
- ௐ தந்தை – கந்தப்பிள்ளை
- ௐ யாழ்ப்பாணம் - நல்லூரில்
- ௐ 1822ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி

## 17. மும்மலம்

01. சைவ சித்தாந்தம் எடுத்துரைக்கும் முப்பொருள்கள் எவை?
    ௐ பதி, பசு, பாசம்

02. ஆன்மாக்களின் இலட்சியம் யாது? அதனை அடைவதற்குத் தடையாக இருப்பவை யாவை?
    1. இறைவனை அடைதல்
    2. பாசங்கள்

03. பாசம், மலம் ஆகிய சொற்களின் பொருளைத் தருக.
    ௐ பாசம் - பாசம் என்ற சொல்லின் பொருள் கட்டு – பந்தம் என்பதாகும். ஆன்மாக்களை ஈடேறவிடாது அவற்றை பந்தித்து கட்டிவைத்திருப்பவை ஆதலால் அவை பாசம் எனப்படுகிறது.
    ௐ மலம் - மலம் என்றால் அழுக்கு என்பது பொருளாகும். ஆன்மாக்களை பீடித்துள்ள அழுக்குகளாதலால் அவ்வாறு அழைக்கப்படுகிறது.

04. பாசம் எத்தனை வகைப்படும்? அவை எவை?
    ௐ 03 வகைப்படும்.
    ௐ ஆணவம், கன்மம், மாயை

05. ஆணவம் காரணமாக ஆன்மாவிடம் உண்டாகும் தீய குணங்கள் எவை?
    ௐ கோபம், குரோதம், ஆசை, மயக்கம்

06. சகசமலம் என்று சுட்டப்படுவது எது? அவ்வாறு சுட்டப்படுவற்கான காரணம் யாது?
    1. ஆணவம்
    2. ஆன்மா எப்போதிருந்து உள்ளதோ அப்போதிருந்தே அதனோடு ஆணவமும் உள்ளது. அதனால் ஆணவத்தை சகசமலம் என்பர். (சகசம் என்றால் கூடப் பிறந்தது என்பது பொருள்)

07. கன்மம் என்பது யாது?
    1. ஆன்மாக்கள் செய்யும் செயல்களும் அவற்றின் விளைவுகளும் கன்மம் எனப்படும். வினை என்ற சொல்லாலும் அதனைக் குறிப்பிடலாம்.

08. ஆன்மா பல பிறவிகளை எடுப்பதற்கான காரணம் யாது?
    1. ஆன்மா செய்யும் வினையும் வினைப்பயனையும் அனுபவிப்பதற்காகவே ஆன்மா பல பிறவிகளை எடுக்கின்றது.

09. பிரார்த்த வினை, ஆகாமிய வினை, சஞ்சித வினை என்பவற்றை விளக்குக.
    1. பிரார்த்த வினை – அனுபவிக்கின்ற வினை
    2. ஆகாமிய வினை – அனுபவிக்கின்ற போது புதிதாகச் செய்யப்படும் வினை
    3. சஞ்சித வினை – பயனை அனுபவிக்காமல் எஞ்சியிருக்கும் வினை

10. முத்தியின்பத்துக்கு வழிவகுக்கும் வினை யாது?
    ௐ ‘‘நான் செய்கிறேன் என்று எண்ணாது கடவுளுடைய திருவருள் செய்விக்கிறது’’ என்று நாம் செய்யும் செயல்களைக் கடவுளுடையதாகக் கருதிக் கொள்ளும் போது, அவை நிலையற்றனவாக உலக இன்பங்களைத் தராது, நிலையான முத்தியின்பத்திற்கு வழிவகுக்கும். அவ் வகையான வினையே பற்றற்ற வினை (நிஷ்காமிய கர்மம்) என்பர்.

11. இறைவன், தனு, கரண, புவன போகங்களை எதிலிருந்து உருவாக்குகின்றான்? எதற்காக உருவாக்குகின்றான்?
   ॐ மாயையிலிருந்து
   ॐ ஆணவ வயப்பட்டு அறியாமையுள் மூழ்கியிருக்கும் ஆன்மாவுக்கு அறிவினை ஏற்படுத்தும் பொருட்டு இறைவன் தனு, கரண, புவன போகங்களை மாயையிலிருந்து உருவாக்கி அருள்கின்றான்.

12. அறிவைத் தருவதாக இருந்த போதிலும் மாயையைப் பாசம் என்று சுட்டுவதன் காரணம் யாது?
   ॐ மாயையால் ஆன்மா அறிவைப் பெறுகின்றது என்பது உண்மையே. எனினும் அந்த அறிவு பூரணமான அறிவு அல்லாத நிலையில்லாத உலகை நிலையானது என்று எண்ணச் செய்து அதில் ஆன்மாவைப் பற்று வைக்கச் செய்கின்ற மயக்க அறிவு அது. அதனாலேதான் மாயையும் பாசம் எனப்படுகின்றது.

13. ஆணவமாகிய பெரும் இருட்டினுள்ளே அழுந்திக் கிடக்கின்ற ஆன்மாவுக்கு இறைவனை அறிவதாகிய பேரொளி தோன்றும் வரையில் அந்த ஆன்மாவின் கன்ம பலனுக்கு ஏற்ற வகையில் ஒரு கைவிளக்குப் போல இருப்பது எது?
   ॐ மாயை

14. நம்மிடம் உண்டாகின்ற தீய குணங்கள் யாவற்றுக்கும் மூல காரணம் எது?
   ॐ ஆணவம்

15. கன்ம வினைகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
   ॐ இரு வகைப்படும்
   ॐ நல்வினை, தீவினை

16. நல்வினை, தீவினையின் வகைப்பாடுகளை எழுதுக.

| நல்வினை |
|---|
| 1. பதி நல்வினை (சிவ நல்வினை) – கடவுள் மெய்யடியார்களுக்கு செய்யும் வினை |
| 2. பசு நல்வினை – உயிர்களுக்குச் செய்யும் நல்வினைகள் |

| தீவினை |
|---|
| 1. பதித் தீவினை (சிவத் தீவினை) |
| 2. பசுத் தீவினை |

## 18. திருவருட் பயன்

நான்காம் அதிகாரம் - அருளது நிலை
ஐந்தாம் அதிகாரம் - அருளுரு நிலை

01. உலகத்தில் உயிர்கள் பெறுகின்ற பொருள்களுள் மேலானது எது?
ௐ திருவருள்

02. திருவருள் ஏன் சூரியனுக்கு ஒப்பிடப்படுகின்றது?
ௐ உலகத்திலுள்ள உயிர்த் தோற்றங்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலியவற்றைக் கொடுத்தும் அவற்றை அனுபவிப்பதும் ஒளியைக் கொடுத்தும் நிற்கும் சூரியன் போல் திருவருளானது உயிர்களுக்கெல்லாம் புண்ணிய பாவங்களை வளர்க்கவும் அவற்றின் பயனாகிய சுக துக்கங்களை அருந்தவும் காரணமாய் நின்றது.

03. உடம்பு எத்தகையது?
ௐ ஐம்பூதங்களின் சேர்க்கையானதும் சடத்துவமானதுமான உடல் ஒன்றையும் அறியமாட்டாது.

04. பாற்கடலிலே வாழும் மீனுக்கு ஒப்பிடப்படுபவை எவை? அவை ஏன் அவ்வாறு ஒப்பிடப்படுகின்றது?
ௐ ஆன்மாக்கள்
ௐ திருப்பாற்கடலில் உள்ள மீன்கள் பாலைப் பருகாது இழிந்து பிராணிகளை வலிந்து தேடல் போல ஆன்மாவும் திருவருளில் இருந்தும் அதனையுணராது புலன் வழியே மயக்கத்தைக் கொடுக்கும் உலக விஷயமாகிய பிறவிக் கடலில் ஆழ்ந்து நிற்கும்.

05. தற்கேடர் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?
ௐ ஞானமாகிய அருளிலே (திருவருளிலே) தங்கி நின்று அதனைத் தேடும் அறிவிலிகள்.

06. 'பாற்கலன் மேல் பூஞை கரப்பருந்த நாடுவது' எதற்கு உவமையாகின்றது?
ௐ பூனை பாலைப் பருகாது கரப்பானைப் பிடிக்கத் தாவியதால் பாற்குடம் விழுந்து உடைவதோடு பூச்சியும் அகப்படாது போகப் பூனை வருந்துவதைப் போல நல்ல ஞானத்தை மன அமைதியோடு கேளாது புலன்வழி மனத்தை விட்டு மக்கள் கெடுவர்.

07. 'வெற்றுயிர்க்கு வீடு மிகை' என்று எதனால் கூறப்படுகின்றது?
ௐ அநாதியே தொடங்கித் திருவருளோடு கலந்து நிற்கும் ஆன்மாவானது அத்திருவருளை உணராது இன்றுவரை இருந்ததால் அதற்கு மேலான வீட்டின்பம் (வீடுபேறு) பொருத்தமற்றதாகும்.

08. "பார்வையென மாக்களை முன் பற்றிப் பிடித்தற்காம் போர்வை" என விளங்குபவன் யார்?
ௐ பக்குவமில்லாதவர்

09. இறைவன் சகலர்க்கு எவ்வடிவிலே வந்து அருள் புரிவான்?
ௐ குருவடிவாய் வந்து மலங்களை நீக்கியருள்வார்.

10. "ஞானமிவனொழிய.." என்ற குறட்பாவின் பொருளை எழுதுக.
ௐ சூரிய காந்தக் கல்லில் நெருப்புத் தோன்றிப் பஞ்சை எரிப்பதைப் பார்த்திருக்கின்றோம். ஆனால் சூரிய ஒளி இல்லையேல் அந்த நல்கல் ஆகிய சூரியகாந்தக் கல்லில் நெருப்புத் தோன்றாது. அதுபோல, அருள் வடிவினரான குருவானவர் இல்லாவிட்டால் ஆன்மாவிடம் ஞானம் தோன்றி மலத்தை எரிக்கமாட்டாது.

## 19. சைவ சாதனைகள்

01. நாம் மனிதப் பிறவி எய்தியன் நோக்கம் யாது?

ॐ ஆன்ம விடுதலையைப் பெறல் (முத்தி பெறல்)

02. தீட்சை என்பதன் பொருள் யாது? தீட்சையின் வகைகள் எவை?

ॐ தீட்சை என்பது

- மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது என்றும்
- பற்றுக்களை அழித்து வீடுபேற்றில் செலுத்துவது என்றும் பொருள்படும்.

ॐ சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை

03. தீட்சை பெற்றவர் செய்ய வேண்டிய நித்திய அநுட்டானங்கள் எவை?

ॐ தீட்சை பெற்றவர் தினமும் காலையும் மாலையும் சந்நியா வந்தனம் எனும் சமய அநுட்டானத்தை நிறைவேற்றல்.

ॐ முறைப்படி மந்திரங்களை ஓதிக் கொண்டு சிரசு, நெற்றி, மார்பு முதலிய குறித்த 16 இடங்களிலும் திரிபுண்டரமாக விபூதியை அணிதல்.

ॐ தர்ப்பணம், செபம், திருமுறை பாராயணம், சூரிய நமஸ்காரம் போன்றவற்றை நிறைவேற்றல்.

04. நிராதார, சாதார தீட்சைகளுக்கிடையேயான வேறுபாடு யாது?

ॐ சகலருக்கும், பிரளயாகலருக்கும் வேறோர் ஆதாரத்தை வேண்டாது தானாகக் குருவாய் வந்து மலத்தைப் போக்குவது நிராதார தீட்சையாகும். ஆனால் சாதார தீட்சை என்பது சகலர்க்கு அளிக்கும் தீட்சை (குருவை ஆதாரமாகக் கொண்டு அளிக்கும் தீட்சையாகும்)

05. நயன, ஸ்பரிச, வாசக தீட்சைகளை விளக்குக.

ॐ சகலருட் பக்குவ நிலை அடைந்தவர்களுக்குச் சிவபெருமான் மானுட உடம்பு எடுத்து ஊரும் பேரும் உறவு கொண்டு எழுந்தருளி, அருள் நோக்கம் செய்தல் நயன தீட்சையாகும். கையால் தீண்டுதல் ஸ்பரிச தீட்சையாகும். சொற்களால் உபதேசிப்பதாகிய வாசக தீட்சையாகும். இம் மூன்றையும் இறைவன் செய்வான் என்று நூல்கள் கூறுகிறது.

06. திருவடி தீட்சை அவற்றுள் எதனைச் சாரும்? சாம்பவ தீட்சை எதனைச் சாரும்?

| | |
|---|---|
| திருவடி தீட்சை | ஸ்பரிச தீட்சையின் பாற்படும் |
| சாம்பவ தீட்சை | நயன தீட்சையின் பாற்படும் |

07. சரியை என்றால் யாது? இந்நெறி தாசமார்க்கம் என அழைக்கப்படுவதன் காரணம் யாது?

ॐ சைவ சாதனங்களுள் முதலாவதாக விளங்குவது சரியையாகும். அதாவது பெரும்பாலும் உடம்பு சார்ந்த புறத்தொழிலாற் சிவனுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியை எனப்படும்.

ॐ இவ்வழிபாட்டிலே சாதகன் தன்னை அடிமையாகவும் சிவனை ஆண்டானாகவும் பாவனை செய்கின்றான். ஆதலால் இது தாசமார்க்கம் (அடிமை நெறி) என்று குறிப்பிடப்படுகிறது.

08. சாலோக முத்தி என்பது யாது?

- ௐ சரியைத் தொண்டுகள் மூலம் பெறப்படும் முத்தி சாலோக முத்தி எனப்படும். (சிவனுடைய உள்ளத்தில் இருத்தலாகிய முத்தியாகும்)

09. சற்புத்திர மார்க்கம் என்றால் என்ன? சாமீப முத்தி என்றால் என்ன?

- ௐ அகத் தொழிலாலே சிவனுடைய அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு கிரியை நெறியாகும். இக்கிரியை நெறியே சற்புத்திரமார்க்கம் ஆகும். (மகன்மை நெறி)
- ௐ கிரியை முறையை அனுட்டிப்பதால் சிவனோடு அருகில் இருத்தலாகிய முத்தியைப் பெறல் சாமீப முத்தியாகும்.

10. யோகத்தின் எட்டு அங்கங்களும் எவை?

- ௐ இயமம்
- ௐ நியமம்
- ௐ ஆசனம்
- ௐ பிராணாயாமம்
- ௐ பிரத்தியாகாரம்
- ௐ தாரணை
- ௐ தியானம்
- ௐ சமாதி

11. சாரூப முத்தி என்றால் என்ன?

- ௐ யோக நெறியில் நின்றவர் சிவனது உருவத்தைப் பெறுதலாகி முத்தியே சாரூப முத்தியாகும்.

12. சன்மார்க்கம் என்பதை விளக்குக.

- ௐ ஞானமானது ஆன்மாவாகிய தன்னைச் சிவார்ப்பிதஞ் செய்தல் அதாவது சிவனை உருவம், அருவுருவம், அருவம் ஆகிய முத்திறத் திருமேனிகளையும் கடந்து சச்சிதானந்தப் பிழம்பாய் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் திருமேனியுடையவராகக் கண்டு, அறிவால் வழிபடும் மார்க்கமாகும்.
- ௐ இந்த வழிபாட்டில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்னும் 04 அங்கங்கள் உள்ளன எனவும் ஞான நெறியிற்கு சன்மார்க்கம் எனவும் கூறப்படும். பரமுத்தி அடைவதற்குரிய நேர் வழியாக அமைவது சன்மார்க்கமாகும். அதாவது ஆன்மா பதியை அடையும் மார்க்கமாகும்.

13. ஞானமார்க்கத்தின் படிநிலைகள் எவை?

- ௐ கேட்டல்
- ௐ சிந்தித்தல்
- ௐ தெளிதல்
- ௐ நிட்டை கூடல்

14. சீவன் முத்தி என்றால் என்ன?

- ௐ ஆன்மா சார்ந்ததன் வண்ணமாவது பாசத்தோடு சார்ந்திருக்கும் பெத்த நிலையிலேயே அசத்தைச் சார்ந்து அசத்தையே காணும். தன்னையும் அசத்தாகவே காணும் இந்தச் சரீரமே தான் என்று எண்ணும். இவ்வாறிருந்த ஆன்மா முத்தி நிலையிலே சத்தைச் சார்ந்து சத்தையே காணும். அது இந்த உயர் நிலையடைந்து உடலோடு கூடியிருக்கும் நிலை சீவன் முத்தி எனப்படும். சீவன் முத்தர் உடம்பு பிரியும் போது சிவத்துடன் இரண்டறக் கலந்து பேரின்பம் அனுபவிப்பர்.

15. பரமுத்தி என்பது யாது?

ௐ ஞான மார்க்கத்தில் நின்று பெறும் முத்தி பரமுத்தி ஆகும். அதாவது சிவத்துடன் இரண்டறக் கலந்து பேரின்பம் அடையும் முத்தியாகும்.

16. கீழ்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| நெறி | நின்ற அருட்குரவர் | முத்தி | மார்க்கம் |
|---|---|---|---|
| சரியை | அப்பர் | சாலோகம் | தாசமார்க்கம் |
| கிரியை | சம்பந்தர் | சாமீபம் | சற்புத்திர மார்க்கம் |
| யோகம் | சுந்தரர் | சாரூபம் | சக மார்க்கம் |
| ஞானம் | மாணிக்கவாசகர் | சிவசாயுச்சியம் | சன் மார்க்கம் |

17. “சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்” எனக் கூறியவர் யார்? ஏன் அவ்வாறு கூறினார்?

ௐ மாணிக்கவாசகர்

ௐ ஏனெனில் அவர் சீவன் முத்தராய் இருந்த நிலையில் தாம் பெற்ற அனுபவத்தை ஏனையோருக்கும் அறிந்து கொள்வதற்காகவாகும்.

# 20. நாட்டார் வழிபாடு

1. கண்ணகையம்மன் வழிபாடு
2. நாகதம்பிரான் வழிபாடு

01. இலங்கையில் பௌத்தர்கள் கண்ணகியை எவ்வாறு குறிப்பிட்டு வழிபடுகின்றனர்?
ॐ பத்தினி தெய்யோ

02. சிலப்பதிகாரக் கதை வலியுறுத்தும் உண்மைகளுள் கண்ணகி வழிபாட்டுக்கு அடிப்படையாக அமைந்தது யாது?
ॐ ''உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்''

03. கண்ணகி இலங்கைக்கு வந்தமை தொடர்பாகக் கூறப்படும் மரபுச் செய்திகள் யாவை?
ॐ சிலப்பதிகார காலத்திலிருந்தே தமிழகத்திலும் கடல் கடந்து இலங்கையிலும் கண்ணகி வழிபாடு சிறப்புற்றோங்கியது. அக்காலத்தில் இலங்கையில் ஆட்சி புரிந்த கஜபாகு மன்னனே கண்ணகி வழிபாட்டை இங்கு அறிமுகப்படுத்தினான் என்று சிலப்பதிகாரத்தால் அறிய முடிகிறது.

ॐ பிற்காலத்தில் நாட்டார் மரபு வழிப்பட்ட நிலையில் கண்ணகி கதையை எடுத்துரைப்பதாய் கண்ணகி வழக்குரை, சிலம்பு கூறல், கோவலனார் கதை முதலான நூல்கள் எழுந்தமை.

04. கண்ணகி அம்மனுக்குரிய வருடாந்த சடங்குகள் எப்போது இடம்பெறும்?
ॐ வைகாசி மாதத்தில் வரும் பூரணையை ஒட்டிய திங்கட் கிழமையை இறுதி நாளாகக் கொண்டு இடம்பெறும்.

05. கண்ணகியம்மன் சடங்குகளின் போது பாடப்படுவன யாவை? அவற்றுக்குப் பின்னணியாக ஒலிப்பன யாவை?
ॐ கண்ணகி வழக்குரை
ॐ சிலம்பு கூறல்
ॐ கண்ணகி காவியம்
ॐ கண்ணகியம்மன் சிந்து

ॐ சிலம்பு, உடுக்கு, பாறை, குழல், அம்மானைக்காய்

06. பின்வருவனவற்றை விளக்குக.

| | |
|---|---|
| குளிர்த்திச் சடங்கு | கண்ணகியின் கோபம் தணியும் பொருட்டுச் செய்யப்படுவதாகும். (குளுர்த்தி என்பது குளர்ச்சி என்பதன் திரிபாகும்) |
| பத்தாசி | சிறு தெய்வ வழிபாட்டைக் கூறும் நூற்தொகுதி பத்தாசி எனப்படும். |
| நேர்த்திக் கடன் | குறித்த தெய்வத்தை நோக்கி மக்களால் தமக்கு வேண்டிய ஐஸ்வரியங்கள் கிட்டும்படி செலுத்தப்படும் காணிக்கைப் பொருட்களாகும். |
| பூசகர் | கிராமியத் தெய்வங்களுக்குரிய பூசைகளைச் செய்பவர் பூசகர் ஆவார். |

07. இந்துக் கடவுளரோடு, நாகம் தொடர்புபடுமாற்றை எடுத்துக் காட்டுக.
- ௐ சிவபிரான் நாகாபரணராக விளங்குகின்றமை.
- ௐ திருமால் பாம்பணையிலே பள்ளி கொள்ளுகின்றமை.
- ௐ அம்பிகை நாகபூசணியாக விளங்குகின்றமை.
- ௐ விநாயகர் தன் உதரபந்தமாக நாகத்தை அணிந்துள்ளமை.
- ௐ முருகக் கடவுள் நாகத்தோடு கூடி விளங்கும் மயிலை வாகனமாகக் கொண்டுள்ளமை.

08. இலங்கையின் பூர்விக மக்களாக நாகர், அப்பெயரால் அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
- ௐ இலங்கையின் பூர்விக இனத்தவர்களாக நாகரும் இயக்கரும் கொள்ளப்படுகின்றனர். இவர்களுள் நாகர் எனப்படுவோர் தமிழினத்தின் மூதாதையராவார். பூர்விக காலத்தில் நாக வழிபாட்டில் மிகுதியும் ஈடுபட்ட காரணத்தாலேயே இவர்கள் நாகர் எனப்பெயர் பெற்றனர் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

09. இலங்கையில் நாகதம்பிரான் ஆலயங்கள் அமைந்துள்ள இடங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.
- ௐ நாகர் கோயில்
- ௐ சேனையூர்
- ௐ புளியம்பொக்கணை
- ௐ பண்டாரியாவெளி
- ௐ புதூர்
- ௐ ஏழாலை
- ௐ நவாலி
- ௐ செம்பியன்பற்று
- ௐ வடலியடைப்பு
- ௐ புளியந்தீவு
- ௐ அனலைதீவு

10. நாகதம்பிரான் ஆலயங்களில் காணப்படும் நாக உருவங்களில் உள்ள சிவலிங்க வடிவம் எதை உணர்த்துகிறது?
- ௐ நாகதம்பிரான் என்ற பெயரில் அமைந்த தம்பிரான் என்ற சொல் சிவபிரானைக் குறிக்கும் என்ற கருத்தும் நிலவுகின்றது. அதற்கேற்ற வகையில் பெரும்பாலான நாகதம்பிரான் கோயில்களில் காணப்படும் நாக உருவங்கள் சிவலிங்கத்தை உள்ளடக்கிய படத்தோடு கூடியனவாக அமையப் பெற்றுள்ளன.

11. இந்து மத புராணங்கள் நாக வழிபாடு தொடர்பாக எவ்வாறு கூறுகின்றது?
- ௐ நாம் வாழும் பூமியை ஆதிசேடன் என்னும் பாம்பே தாங்கி நிற்பதாகக் கூறப்படுகின்றது.

# 21. ஈழத்தில் சைவம்

அநுராதபுர காலம்
பொலன்னறுவைக் காலம்
ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்
ஐரோப்பியர் காலம்

01. இலங்கையை சிவபூமி எனச் சிறப்பித்துக் கூறியவர் யார்?
- ௐ திருமூலர்

02. இலங்கையின் பூர்வீகக் குடிகள் யாவர்?
- ௐ இயக்கர், நாகர்

03. இலங்கையில் முருக வழிபாட்டின் தொன்மையை நிரூபிக்கும் சான்றுகள் யாவை?
- ௐ புத்தளப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வு.
- ௐ தென்னிந்தியாவிலுள்ள ஆதிச்ச நல்லூரில் கிடைத்தவை போன்ற வேலாயுதங்களும், சேவற் சிலைகளும் காவடிச் செதில்களும் மாதோட்டம், கந்தரோடை முதலிய இடங்களிலேயும் கண்டெடுக்கப்பட்டவை.
- ௐ தென்னிலங்கையில் சிறப்புற்று விளங்கும் கதிர்காம முருக வழிபாடு

04. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இலங்கையில் இந்து சமயம் நிலை பெற்றுள்ளதாகக் கூறும் வரலாற்று ஆய்வாளர்கள் இருவரைக் குறிப்பிடுக.
- ௐ வண. வலபொல இராகுல
- ௐ திரு. ஜே. டபிள்யூ. ரெனற்
- ௐ போர்த்துக்கேய வரலாற்றாசிரியரான குவைறோஸ்

குறிப்பு – உறுகுணைத் தேசிய பூங்காவில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் "சிவநகர்" என்ற இப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

05. அநுராதபுர காலத்தில் இந்து சமயம் பெற்றிருந்த முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் சான்றாதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
- ௐ விஜயனுக்குப் பின் அநுராதபுரத்தை ஆண்ட பண்டுவாசுதேவன், அபயன், பண்டுகாபயன் முதலியோர் சைவர்களாக இருந்தமை.
- ௐ கி.மு. 145 - 101 வரையிலான காலத்தில் அநுராதபுரத்தை ஆண்ட எல்லாளன் எனும் தமிழ் மன்னனது காலத்திலே சைவம் வளர்ச்சியடைந்தமை.
- ௐ பண்டுகாபயன் அநுராதபுர இராசதானியை நிர்மாணிக்கும் போது அந்தணர்களுக்கென ஒரு பகுதியை வகுத்தானென்றும் சிவன் கோயில் ஒன்றை நிறுவினான் என்றும் மகாவம்சம் கூறுகிறது.

06. பொலன்னறுவைக் காலத்தில் சைவ சமயம் மேனிலையடைந்தமைக்கான காரணம் யாது?
- ௐ இக்காலப் பகுதியில் இலங்கையில் சைவம் முன்னரிலும் மேனிலை பெற்றுத் திகழ்ந்தமை. காரணம் என்னவெனில் முதலாம் இராஜ ராஜ சோழனும் அவன் மகன் இராஜேந்திர சோழனும் இலங்கை முழுவதையும் தம் ஆட்சிக்குக் கீழ் கொண்டு வந்து பொலன்னறுவையை ஜனநாத மங்கலம் என்ற பெயரில் ஆட்சி செய்தமையாகும்.

07. சோழர்கள் இலங்கையில் நிறுவிய ஆலயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
- ௐ 2ம் சிவாலயம் (வானவன் மாதேவி ஈச்சரம்)
- ௐ இரவிகுல மாணிக்க ஈஸ்வரம்
- ௐ உத்தம சோழேஸ்வரம்

08. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் மூன்றினையும் இயற்றப்பட்ட பிரபந்தங்கள் மூன்றினையும் குறிப்பிடுக.
- ௐ நல்லூர் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம்
- ௐ இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம்
- ௐ உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம்
- ௐ நல்லூர் வீரகாளியம்மன் ஆலயம்
- ௐ நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம்
- ௐ அரியாலை சித்தி விநாயகர் ஆலயம்

பிரபந்தங்கள்

- ௐ தட்சிண கைலாச புராணம்.
- ௐ கோணேசர் கல்வெட்டு என வழங்கும் கோணேசர் புராணம்.
- ௐ கதிரைமலைப் பள்ளு.

09. போர்த்துக்கேயர் காலத்தில் சைவ சமயம் வீழ்ச்சியுற்றமைக்கான காரணங்கள் யாவை?
- ௐ கோட்டை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இராச்சியங்கள் போர்த்துக்கேயர் வசமானவை.
- ௐ இந்துக்களை வலுக்கட்டாயமாக கிறிஸ்தவத்திற்கு மதமாற்றம் செய்தமை.
- ௐ இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டமை.

10. ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த சைவ சமய நூல்கள் யாவை?
- ௐ பறாளை விநாயகர் பள்ளு
- ௐ மறைசையந்தாதி
- ௐ கல்வளையந்தாதி
- ௐ நல்லைக் குறவஞ்சி
- ௐ வண்ணை வைத்தியலிங்கக் குறவஞ்சி
- ௐ நல்லைக் கலிவெண்பா
- ௐ சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ்
- ௐ வெருகல் சித்திரவேலாயுதர் காதல்

11. ஐரோப்பியர் கால கட்டங்களை எழுதுக.
- ௐ போர்த்துக்கேயர் - 1505 – 1658
- ௐ ஒல்லாந்தர் - 1658 – 1796
- ௐ ஆங்கிலேயர் - 1796 – 1948

12. உறுகுணைத் தேசிய பூங்காவில் கண்டெடுக்கப்பட்ட கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்ததெனக் கணிக்கப்படும் கல்வெட்டில் எவ்வாறு குறிக்கப்பட்டிருந்தது?
- ௐ சிவநகர்

13. அநுராதபுரக் காலப்பகுதி யாது?

ॐ கி.மு 4ம் நூற்றாண்டளவில் அநுராதபுரம் பண்டுகாபய மன்னனால் இராசதானியாக உருவாக்கப்பட்டது. அக்காலம் முதல் கி.பி 10ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி அநுராதபுரக் காலப்பகுதியாகும்.

14. தீசனுக்கு முற்பட்ட மன்னர் பெயர்கள் 'சிவன்' என்று முடிவனவாயிருந்தமைக்கு உதாரணம் தருக.

ॐ கிரிகண்ட சிவன்

ॐ மகா சிவன்

ॐ மூத்த சிவன்

15. கி.பி. 2ம் நூற்றாண்டில் சேர நாட்டிலிருந்து பத்தினித் தெய்வ வழிபாட்டை இலங்கையில் அறிமுகம் செய்தவன் யார்?

ॐ கஜபாகு மன்னன்

16. இராஜராஜனின் மனைவி பெயரால் கட்டப்பட்ட கோயில் எது?

ॐ 2ம் சிவாலயம் எனப்படும் வானவன்மாதேவி ஈச்சரம்.

## 22. ஈழத்து ஆலயங்கள்

### 1. மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்
### (மாமாங்கேஸ்வரம்)

01. மாமாங்கேஸ்வர ஆலயம் அப்பெயர் பெற்றமைக்கான காரணம் யாது?

ௐ இந்த ஆலயத்தில் மூலவராக சிவலிங்கப் பெருமானே எழுந்தருளியுள்ளார். ஆயினும் அச்சிவலிங்கத்துக்கு விநாயகர் அங்கி சாத்தி வழிபாடு இயற்றப்படுவதால் மாமாங்கப் பிள்ளையார் என அழைக்கப்பட்டாலும் மூலவர் சிவபிரானே என்பதால் மாமாங்கேஸ்வர ஆலயம் என அழைக்கப்படுகிறது.

02. மூலவரான சிவலிங்கம் பற்றிய ஐதிகம் யாது?

ௐ சீதையைப் சிறை மீட்பதற்காக இலங்கைக்கு வந்த இராமர், இராவணனைக் கொன்று, அவளை சிறை மீட்ட பின் இவ்வழியாக வரும்பொழுது ஓரிடத்தில் ஆல், அரசு, திருவாத்தி, நெல்லி, கொக்கட்டி எனும் ஐவகை மரங்கள் ஒன்றாக வளர்ந்து பஞ்சவடி போல் குளிர்ச்சி தந்தன. அதனைக் கண்ட இராமர் அந்த இடத்திலே தங்கி, மண்ணினால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். காலவோட்டத்தில் அச்சிவலிங்கமானது மரவேர்களாலும் பற்றைகளாலும் மூடப்பட்டு மறைந்திருந்தது. நீண்ட காலத்தின் பின் வேடன் ஒருவன், களைப்பு மிகுதியினால் அவ்விடத்தில் சிறிது நேரம் துயின்றான். அப்பொழுது அவனுடைய கனவில் அந்தச் சிவலிங்கம் காட்சியளித்தது. வேடன், தான் கனவில் கண்ட ஆலமரத்தின குறிப்பை வைத்து மரத்தடியில் கிளறிப் பார்த்த போது அங்கு சிவலிங்கம் ஒன்றைக் கண்டெடுத்தான். ஏனைய வேடர்களையும் அழைத்து அவ்விடத்தில் பந்தல் அமைத்து வணங்க ஆரம்பித்தான்.

03. மாமாங்கத் தீர்த்தத்தின் சிறப்புகள் யாவை?

ௐ தீராத நோய்கள் தீரும்.

ௐ பிதிர்க்கடன் நிறைவேற்றும் சிறப்புப் பெற்றது. (உ-ம்) புரட்டாதி மாத மகாளய பட்சயத்தில் பிதிர்க்கடன் நிறைவேற்றுதலைக் குறிப்பிடலாம்.

04. இலிங்கம், முள்ளாலலிங்கம் எனப் பெயர் பெற்றிருப்பதன் காரணம் யாது?

ௐ முள் ஆலமர அடியில் கிடைக்கப் பெற்றதனால் அவ்விலிங்கம் முள்ளாலலிங்கம் எனப் பெயர் பெற்றது.

05. இவ்வாலயத்தில் மகோற்சவம் நிகழும் காலம் யாது?

ௐ ஆடி அமாவாசை தினத்துக்கு பத்து நாட்களுக்கு முன் கொடியேற்றி ஆடி அமாவாசையன்று தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

06. மாமாங்கேஸ்வர ஆலயத்தின் தலவிருட்சம் எது?

ௐ குருந்த மரம்

07. அமிர்தகழி எனப் பெயர் பெறுவதற்கான காரணம் யாது?

ௐ தாமரை மலர்கள் அழகு செய்கின்ற இத்திருக்குளத்தில் சந்தனச் சேறு எனப்படுகின்ற ஒருவகைக் களிமண் உள்ளது. தீராத நோய்களையெல்லாம் தீர்த்து வைப்பதால் அது அமிர்தகளி (ழி) என்று சுட்டப்படுகின்றது.

08. மாமாங்கத் தீர்த்தம் எனப் பெயர் வரக் காரணம் யாது?

ௐ இந்தியாவில் வாழ்ந்த முனிவர் ஒருவர் கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, துங்கபத்திரை, பவானி, காவேரி, தாமிரபரணி, கன்யாகுமாரி ஆகிய 09 தீர்த்தங்களைத் தம் கமண்டலத்தில் கொணர்ந்து இதில் கலந்து நீராடிய பின் இங்குள்ள சிவலிங்கத்தை வழிபட்டு பேறுபெற்றார். 09 பெரிய மங்கை என்னும் ''மாமங்கை'' எனப் பெயர் பெற்றது.

## 2. திருக்கேதீஸ்வரம்

01. கேதீஸ்வரம் எனும் பெயர் ஏற்படக் காரணம் யாது?
- ॐ நவக்கிரகங்களுள் ஒன்றாக கேது வழிபட்ட தலமாக விளங்கியதால் இத்தலம் கேதீஸ்வரம் எனப் பெயர் பெற்றது.

02. திருக்கேதீஸ்வரத்தின் இறைவன், இறைவி யாவர்? தீர்த்தம் யாது?
- ॐ இறைவன் - கேதீஸ்வர நாதர்
- ॐ இறைவி - கௌரி அம்பாள்
- ॐ தீர்த்தம் - பாலாவி

03. அந்நியராட்சியால் அழிவுற்ற திருக்கேதீஸ்வரம் புனர்நிர்மாணம் பெறுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தவர் யார்? புனரமைப்புப் பணிகளை முன்னின்று செய்தவர் யார்?
- ॐ ஆறுமுக நாவலர்
- ॐ பசுபதிச் செட்டியார்

04. திருக்கேதீஸ்வம் மீது திருப்பதிகங்கள் பாடியருளிய தேவார முதலிகள் யாவர்?
- ॐ சம்பந்தர்
- ॐ சுந்தரர்

05. சிவராத்திரி விரதம் இவ்வாலயத்தில் எவ்வாறு அனுட்டிக்கப்படுகிறது?
- ॐ நாடெங்குமிருந்து வரும் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் பாலாவியில் தீர்த்தமாடி, தீர்த்தத்தைக்குடத்திலே ஏந்தித் தலையிற் சுமந்தபடி, வரிசையாகக்ச் சென்று புராதன மகாலிங்கத்துக்குத் தாமே அபிஷேகம் செய்து பூசிக்கும் நிகழ்வு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

06. இவ்வாலயத்தின் சூழலில் அமையப் பெற்ற மடங்கள் எவை?
- ॐ திருஞானசம்பந்தர் மடம்
- ॐ திருவாசக மடம்
- ॐ நாவலர் மடம்
- ॐ சிவராத்திரி மடம்
- ॐ கதிர்காம யாத்திரிகர்கள் தொண்டர்சபை மடம்

## 3. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்

01. வற்றாப்பளை என்ற பெயர் எவ்வாறு உருவானது?

ௐ கண்ணகி மதுரையை எரித்த பின்னர் ஈழத்துக்கு வந்து பத்து இடங்களில் தங்கியிருந்ததாகவும் பத்தாவது இடமே வற்றாப்பளை என்றும் கூறப்படுகின்றது. அதாவது பத்தாவதாக இருந்த இடம் என்பதால் பத்தாம்பளை எனப் பெயர் பெற்று பின்பு வற்றாப்பளை என மருவியது என்பர்.

02. இவ்வாலயத் தோற்றம் பற்றிய மரபு வழிக் கதை யாது?

ௐ இக்கிராமத்தின் கிழக்கே உள்ள நந்திக் கடற்கரை ஓரத்தில் இடைச் சிறுவர்கள் மாடு மேய்த்துச் செல்வது வழக்கமாகும். ஒரு நாள் மூதாட்டி ஒருவர் மிகுந்த களைப்புடன் அந்தச் சிறுவர்கள் இருக்கும் இடத்தை அடைந்தார். சிறுவர்கள் பொங்கல் செய்து படைத்து அவரின் களைப்பை நீக்கினர். அப்போது அம்மூதாட்டி தான் சோழ நாட்டிலிருந்து வந்ததாகவும் வைகாசி விசாக நாளில் தனக்குப் பொங்கலிட்டு வழிபடுமாறும் கூறி மறைந்து விட்டார். இச் செய்தியைச் சிறுவர்கள் ஊர் மக்களுக்குத் தெரியப்படுத்தினர். ஊர் மக்கள் வந்து பார்த்த போது மூதாட்டி அமர்ந்திருந்த பட்டுப்போன வேப்பம் குற்றி தழைத்திருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். அவ்விடத்தில் ஆலயம் அமைத்து வழிபாடு செய்ய ஆரம்பித்தனர்.

03. இவ்வாலயப் பெருவிழா எப்போது எவ்வாறு நடைபெறுகின்றது?

ௐ வைகாசி விசாகத்தன்று

ௐ இவ்வைகாசிப் பொங்கற் சடங்குகளானது பஞ்சாங்கம் ஆளல், பாக்குத் தெண்டல், தீர்த்தமெடுத்தல், கடல் நீரில் தீபமேற்றல், மடைப்பண்டமெடுத்தல் என்ற ஒழுங்குமுறையில் இடம்பெறும்.

04. இவ்வாலயப் பொங்கலில் இடம்பெறும் சடங்குகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

| | |
|---|---|
| பஞ்சாங்கம் ஆளல் | பொங்கற் கிரியைகளை மேற்கொள்ளும் பூசாரியார் கோயிலுடன் தொடர்புடைய பெரியோர்கள் ஆகியோர் ஒன்றுகூடி பொங்கல் சடங்குகளுக்கான நாள்களைப் பஞ்சாங்கத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிப்பதாகும். |
| பாக்குத் தெண்டல் | பொங்கல் இடம்பெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் பொங்கல் தினம் பற்றி ஊர் மக்களுக்குத் தெரிவிக்கும் சடங்காகும். |
| தீர்த்தம் எடுத்தல் | காட்டு விநாயகர் ஆலயத்தில் பூசை இடம்பெற்ற பின்னர் அன்றைய தினம் மாலைவேளையில் சிலாவத்துறைக் கடலிலிருந்து தீர்த்தம், காட்டு விநாயகர் ஆலயத்துக்கு ஊர்வலமாக எடுத்து வரப்படல். |

05. பொங்கல் காலங்களில் ஆலயச் சூழலில் இடம்பெறும் கூத்து யாது?

ௐ கோவலன் கூத்து

06. நோற்புக் காரர் எனப்படுவோர் யார்?

ௐ தொண்டு செய்யும் பணியில் ஈடுபடும் ஒரு சமூகத்தவர் ஆவர்.

07. இவ்வாலயக் கிரியைகளுக்கான பத்ததிகளை வழங்கியவர் யார்?

ௐ பக்தஞானி என்பவர்

08. ஆகமம் சாரா வழிபாட்டிலிருந்து ஆகம முறையில் வழிபாட்டிற்கு எப்போது மாறியது?

ௐ 19ம் நூற்றாண்டு

## 4. மண்டூர் கந்தசுவாமி கோயில்

01. திருப்படைக் கோயில் என்றால் என்ன?

ௐ கோயிலின் கருவறையில் வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள கோயில்கள் திருப்படைக் கோயில்கள் ஆகும்.

02. மண்டூர் கந்தசுவாமி கோயிலின் தோற்றம் பற்றிய செவிவழிக் கதை யாது?

ௐ சீர்பாதன் வரன்முறைக் கல்வெட்டு என்னும் இலக்கியக் குறிப்பு ஒன்றில் வீரமுனைக்கு வந்த சோழ நாட்டு அரசியான சீர்பாததேவி வீரமுனையை விட்டு சிங்கை நகருக்குச் செல்லும் போது தான் வழிபட்டு வந்த தங்க வேலைத் தமது குல மக்களிடம் கொடுத்து விட்டுச் சென்றாள் எனவும் சிறிது காலத்தின் பின் குறிப்பிட்ட குல மக்களிடையே உண்டான முரண்பாடு காரணமாக குலத்தில் ஒருவனான சித்தன் என்பவன் வேலினை எடுத்துக் கொண்டு வெகுதொலைவில் உள்ள தில்லைமரம் ஒன்றிலே பதித்து விட்டு தமது உறவுகளுடன் துறைநீலாவணையில் வசித்து வந்தான் எனவும், சிறிது காலத்தின் பின் அதனை எடுக்கச் சென்ற வேளையிலே வேடுவர்கள் கொத்துப் பந்தல் அமைத்து வேலினை வைத்து வழிபடுவதனைக் கண்டான் எனவும், பின்னர் சித்தன் தமது ஊரவர்களும் அயற்கிராமத்தவர்களதும் உதவியுடன் கோயிலை அமைத்து அதற்குத் தில்லை மண்டூர்க் கந்தசுவாமி கோயில் எனப் பெயரிட்டு வழிபடத் தொடங்கினான் எனவும் கூறப்படுகின்றது.

03. இவ்வாலயத்தை சின்னக் கதிர்காமம் என அழைப்பதன் காரணம் யாது?

ௐ கதிர்காம முருகன் கோயிலில் இடம்பெறுகின்ற சில சம்பிரதாயங்கள் இக்கோயிலிலும் இடம்பெறுவதனால் அப்பெயர் வருவதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

04. இவ்வாலயத்தின் உற்சவ காலம் யாது?

ௐ ஆவணி மாதப் பௌர்ணமியைத் தீர்த்த நாளாகக் கொண்டு 21 நாட்கள் நடைபெறுகின்றது.

05. இங்கு பூசை செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?

ௐ கப்புகனார்

06. மண்டூர் கந்தசுவாமி கோயிலில் உள்ள பரிவாரக் கோயில்கள் எவை?

ௐ குமார தம்பிரான் கோயில், வள்ளி தெய்வானைக்கென தனிக் கோயில்கள்

07. மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடு எவ்வாறு இயற்றப்படுகிறது?

ௐ இவ்வாலயத்தில் ஆகமம் சாராத வகையிலேயே வழிபாடுகள் இயற்றப்படுகின்றன. கப்புகனார், பூசை வேளையில் சுவாமிக்குரிய அமுதினை காவு தடியில் சுமந்து சென்று மூலஸ்தானத்தில் வழிபட்ட பின்னர், திரைச்சீலைக்கு முன்பாக வந்து மணி, சங்கு, பேரிகை முழங்க தீபாராதனை காட்டும் காட்சி உணர்வுபூர்வமானது. கதிர்காமம் போன்றே இங்கும் திரை திறவாமல் பூசை இடம்பெறுகின்றது. இங்கு கந்தசஷ்டி விரதம் அனுட்டிக்கும் முறை தனித்துவமானது. இக்காலத்தில் திருச்செந்தூர்ப் புராணம் படனம் செய்யப்படும். விரத இறுதி நாளன்று சூரன் போர் இடம்பெறுவதில்லை. திருக்கல்யாண உற்சவம் மட்டக்களப்பின் மரபுவழி திருமண நடைமுறைகளுடன் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

## 5. இணுவில் கந்தசுவாமி கோயில்

01. இணுவில் கந்தசுவாமி கோயிலை அமைத்தவர் யார்?
 ॐ காஞ்சிபுரத்திலிருந்து இங்கு வந்து குடியேறியவரும் அக்காலத்தில் இணுவில் பகுதிக்குப் பொறுப்பாக இருந்தவருமான ''பேராயிரமுடையோன் முதலி'' என்பவர்.

02. இவ்வாலயத் தோற்றம் பற்றிய மரபுவழிக் கதை யாது?
 ॐ ஒரு நாள், அந்தணச் சிறுவர் இருவர், முதலியாரது வீட்டுக்கு வந்தனர். தாங்கள் காஞ்சிபுரத்திலிருந்து வந்ததாகவும் தம்மை ஆதரிக்க வேண்டும் எனவும் முதலியாரிடம் கூறினர். அவர்கள் கூறிக் கொண்டிருக்கும் போதே ஊரவர் யாவரும் கண்டு அதிசயிக்கத்தக்க வகையில் பேரொளிப் பிழம்பு ஒன்று தோன்றியது. சிறுவர்கள் இருவரும் மறைந்து விட்டனர். தம்மிடம் வந்த சிறுவர்கள் இருவரும் முருகப்பெருமானும் வைரவப் பெருமானுமே என முதலியார் நம்பினார். தனது பூர்விக ஊரான காஞ்சிபுரத்துக் கந்தகோட்ட முருகப் பெருமானை மனதிற் கொண்டவராக முதலியார் இணுவில் கந்தசுவாமி கோயிலைக் கட்டினார்.

03. இவ்வாலயத்தில் மகோற்சவம் இடம்பெறும் காலம் யாது?
 ॐ தைப்பூசம்
 ॐ கந்தசஷ்டி

04. இவ்வாலய மகோற்சவம் இடம்பெறும் காலம் யாது?
 ॐ ஆனிமாத அமாவாசையைத் தீர்த்த நாளாகக் கொண்டு 25 நாட்கள் நடைபெறும்.

05. இக்கோயில் இணுவைக் காஞ்சி என்று பெயர் பெறக் காரணம் யாது?
 ॐ இணுவில் கந்தசுவாமி கோயிலில் தீர்த்தக் கிணறு தோண்டி காஞ்சிபுரத்துப் புனித தீர்த்தங்களைக் கொண்டு வந்து அதிற் கலந்தார். இவற்றால் அவ்வாலயம் இணுவைக் காஞ்சி என்றும் கந்தகோட்டம் எனவும் பெயர் பெற்றது.

06. இக்கோயிலின் மூல மூர்த்தியாக விளங்குபவர் யார்? தல விருட்சம் யாது?
 ॐ மூலமூர்த்தி – வள்ளி தெய்வயானை சமேத முத்துக்குமார சுவாமி
 ॐ தல விருட்சம் - நொச்சி மரம்

07. இவ்வாலயத்தில் எத்தனை வேளை பூசை இடம்பெறும்?
 ॐ 06 வேளைகள்

08. தைப்பூச தினத்தில் இடம்பெறும் விடயங்கள் எவை?
 ॐ தைப்பூச தினத்தில் ஆறுமுக சுவாமி, மஞ்சத்தில் எழுந்தருளி அருளுவார்.

09. "உலகப் பெருமஞ்சம்" காணப்படும் ஆலயம் எது?
 ॐ இணுவில் கந்தசுவாமி ஆலயம்

10. உலகப் பெருமஞ்சம் யாரால் அமைக்கப்பட்டது?
 ॐ பெரிய சந்நியாசியார் என்று அழைக்கப்பட்ட ஆறுமுகம் சந்நியாசியாரால் 1912ம் ஆண்டில் தென்னிந்திய சிற்பிகளைக் கொண்டு செய்யப்பட்டது.

11. இவ்வாலயத்தின் மீது பாடப்பட்ட பாடல்கள் எவை?
 ॐ மயில்வாகனப் புலவர் - இணுவைப் பதிகம்
 ॐ இணுவை சின்னத்தம்பிப் புலவர் - கல்யாண வேலவர் திருவூஞ்சல்
 ॐ கணபதிதாசன் - இணுவை முருகன் பக்திரசக் கீர்த்தனைகள்

## 6. பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில்

01. பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய இறைவன், இறைவியர் யாவர்?
   - ௐ இறைவன் - ஸ்ரீ வரதராஜப் பெருமாள்
   - ௐ இறைவி - ஸ்ரீதேவி, பூதேவி

02. குளக்கோட்ட மன்னன் அமைத்த இவ்வாலயம் எவ்வாறு காணப்பட்டது?
   - ௐ தட்சிண கைலாசபுராணம் கூறும் போது, குளக்கோட்ட மன்னன் திருக்கோணேஸ்வரத்தின் புனர்நிர்மாணப் பணிகளைச் செய்து கொண்டிருந்த வேளையில் இக்கோயிலை 07 வீதிகள் கொண்டதாக அமைத்தான் எனக் கூறப்படுகின்றது. இந்தியாவிலிருந்து அந்தணர்களை வரவழைத்து வைகாசன ஆகம முறைப்படி பூசை செய்ய ஏற்பாடுகளை மன்னன் செய்து கொடுத்தான் எனவும் கூறப்படுகின்றது.

03. இவ்வாலயம் பற்றிக் கூறும் நூல்கள் எவை?
   - ௐ கோகில சந்தேசய (குயில் விடுதூது) எனும் சிங்கள மொழித் தூதுப் பிரபந்தம்.
   - ௐ யாழ்ப்பாணச் சமயநிலை – ஆறுமுகநாவலர்

04. இவ்வாலயத்தின் மகோற்சவங்கள் பற்றி விளக்குக.
   - ௐ ஆவணி மகோற்சவம் - கிருஸ்ண ஜெயந்தியை 17வது நாளாகக் கொண்டு 18 நாட்கள் நடைபெறுகிறது. அக்காலத்தில் இடம்பெறும் விசேட அம்சங்களிலே கருட சேவை, சப்பரம், வெண்ணெய் திருடல், வேட்டைத் திருவிழா, திருக்கல்யாணம் முதலியவை இடம்பெறும்.

   - ௐ மார்கழி மகோற்சவம் - மார்கழி மாத ஏகாதசி நாளை 9ம் நாளாகக் கொண்டு மொத்தம் 10 நாட்கள் நடைபெறுகிறது. ஏகாதசி அன்று வைகுண்ட சொர்க்க வாசல் திறத்தல் இடம்பெறும்.

05. இவ்வாலயத்தில் விசேடமாக அனுட்டிக்கப்படும் விரதங்களைக் குறிப்பிடுக.
   - ௐ மாதந்தோறும் இடம்பெறும் ஏகாதசி விரதம்
   - ௐ வரலட்சுமி நோன்பு
   - ௐ இராமநவமி
   - ௐ தீபாவளி
   - ௐ நவராத்திரி

06. இரண்டு உற்சவம் இடம்பெறும் ஆலயம் எது? அவ் உற்சவங்கள் எவை?
   - ௐ பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம்
     1. ஆவணி மகோற்சவம்
     2. மார்கழி மகோற்சவம்

07. பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் அமைவிடம் யாது?
   - ௐ யாழ்ப்பாணத்தில் பொன்னாலை கிராமத்தில்

08. சதுரங்க சேத்திரம் என அழைக்கப்படும் ஆலயம் எது?
   - ௐ பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம்

09. பொன்னாலை வரதராஜப் பெருமான் ஆலயத்தின் தீர்த்தம், தலவிருட்சம் போன்றவற்றை எழுதுக.

ௐ தீர்த்தம் - திருவடி நிலை

ௐ தலவிருட்சம் - வன்னிமரம்

10. பொன்னாலை வரதராஜப் பெருமான் ஆலயத்தின் மீது பாடப்பெற்ற நூல்கள் எவை?

| | |
|---|---|
| பே.க. கிருஷ்ணபிள்ளை | வரதராஜர் சரணம் |
| சு. கணபதிப்பிள்ளை | பொன்னாலை வரதராஜர் ஊஞ்சல் |
| நாராயணதாசன் | பொன்னாலை மாயவன் பெருமை, கண்ணன் கீதங்கள் |
| சி. சிவசுப்பிரமணியன் | மாருதி கவசம் |

## 23. சித்திரபுத்திரனார் கதை

01. சித்திரா பௌர்ணமி விரதம் யாரை நினைந்து அனுஷ்டிக்கப்படுகிறது?
   ॐ தம்முடைய இறந்த தாயை நினைந்து இந்துக்கள் இவ்விரதத்தை அனுஷ்டிக்கிறார்கள்.

02. அன்றைய தினம் ஆலயங்களில் இடம்பெறும் முக்கிய நிகழ்ச்சிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   ॐ சித்திரைக் கஞ்சி வார்ப்பது
   ॐ சித்திரபுத்திரனார் கதை படிப்பது

03. சித்திர புத்திரானரின் கடமை யாது?
   ॐ உயிர்களின் பாவ புண்ணியங்களைக் கணக்கிடும் பணியைச் செய்தல்.

04. சித்திரபுத்திரனார் கதையில் இடம்பெறும் முக்கியமானதொரு கிளைக் கதை என இங்கு குறிப்பிடப்படுவது யாது?
   ॐ மார்க்கண்டேயர் கதை

மிருகண்டு முனிவரின் மகன் - மார்க்கண்டேயர்

05. சிவபெருமான் யாருக்காக எமனைச் சங்காரம் செய்தார்?
   ॐ மார்க்கண்டேயருக்காக

06. சித்திரபுத்திரனார் கதையில் சித்திரபுத்திரனாரின் தோற்றம் பற்றி எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?

   ॐ ஒருநாள் சிவபெருமான் ஒரு தங்கப் பலகையில் ஆடவன் ஒருவனின் சித்திரம் ஒன்றை வரைந்தார். அந்தச் சித்திரத்தைக் கண்ட பார்வதிதேவி, அதை உயிர்ப்பிக்குமாறு வேண்டினார். சிவபெருமானும் பார்வதி தேவியின் வேண்டுதலை ஏற்று அதனை உயிர்ப்பித்தார். சித்திரத்திலிருந்து உயிர் பெற்றதால் அவன் சித்திரபுத்திரன் என்ற பெயரைப் பெற்றான். அவன் உயிர் பெற்றது சித்திரை மாதப் பௌர்ணமி நாளிலாகும். எமதர்மராஜாவிற்குத் துணையாக உயிர்களின் பாவ புண்ணியங்களைப் பார்க்குமாறு சிவபெருமான் கட்டளையிட்டார்.

## 24. சைவபரிபாலன சபை

01. சைவபரிபாலன சபை எப்போது தாபிக்கப்பட்டது? தாபிக்கப்பட்டதன் நோக்கம் யாது?
   - ௐ 1888.04.29
   - ௐ இலங்கையில் அந்நியராட்சி நிலவிய காலத்தில், சைவத்திற்கு ஏற்பட்ட ஆபத்துக்களினின்றும் அதனைக் காப்பதற்காகவாகும்.

02. இச்சபையின் நோக்கங்களுள் ஐந்தினைக் குறிப்பிடுக.
   - ௐ சைவ சமயத்தை வளர்த்தல்.
   - ௐ பிற சமயங்களால் ஏற்படும் சவால்களில் இருந்து சைவசமயத்தைக் காத்தல்.
   - ௐ சைவப் பாடசாலைகளை தாபித்து நடாத்துதல்.
   - ௐ அறிஞர்களைக் கொண்டு சைவப் பிரசங்கங்களையும் புராண படனம் முதலானவற்றையும் செய்வித்தல்.
   - ௐ சைவசமயப் பத்திரிகைகளையும் நூல்களையும் வெளியிடுதல்.
   - ௐ அழிந்த நிலையில் இருக்கும் சைவாலயங்கள் மற்றும் பழமை வாய்ந்த சைவ தருமஸ்தாபனங்களைப் புதுப்பித்து ஒழுங்காக இயங்கச் செய்தல்.
   - ௐ கோயில்களதும் திருமடங்களதும் சொத்துக்களைப் பொறுப்பேற்றுப் பாதுகாத்து அந்தந்த ஸ்தாபனங்களுக்குச் சேரவைத்தல்.
   - ௐ சைவப் பெண்களுக்கு உயர்கல்வியை வழங்குதல்.

03. இச்சபையால் முன்னெடுக்கப்பட்ட ஆலயப் புனருத்தாரணப் பணி யாது?
   - ௐ திருக்கேதீஸ்வர ஆலயப் புனருத்தாரணப் பணி
     (கும்பாபிஷேகம் 1903இல் நடத்தினர்)

04. இச்சபைமூலம் ஆலயங்களில் சைவப் பிரசங்கங்களை மேற்கொண்ட பெரியார்கள் யாவர்?
   - ௐ பிரம்மஸ்ரீ. க. சுப்பையர்
   - ௐ அ. குமாரசுவாமிப் புலவர்
   - ௐ மு. கனகசபாபதி ஐயர்

05. ஆலயங்களில், அக்காலங்களில் படனம் செய்யப்பட்ட புராணங்கள் யாவை?
   - ௐ கந்தபுராணம்
   - ௐ பெரியபுராணம்
   - ௐ திருவாதவூரடிகள் புராணம்
   - ௐ திருச்செந்தூர் புராணம்

06. புண்ணிய நாச்சியார் மடம் தொடர்பாக சபை மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?
   - ௐ இற்றைக்கு 120 வருடங்களுக்கு முன்னர் வண்ணார் பண்ணையில் வசித்த புண்ணிய நாச்சியார் எனும் பெண்மணி "அம்பலவாணசுவாமி புண்ணியநாச்சி தர்மம்" எனும் தர்ம பரிபாலனத்தை உருவாக்கினார். அதன் மூலம் சிதம்பரத்தில் புண்ணிய நாச்சி அம்மையார் மடம் நிறுவப்பட்டது. 1938ம் ஆண்டு சைவபரிபாலன சபையால் பொறுப்பேற்கப்பட்ட இம்மடம், 2002ம் ஆண்டு நவீன முறையில் புதுப்பிக்கப்பட்டது. இம்மடம்
   - ௐ சிதம்பர ஆலய திருப்பணிகளுக்கு உதவுதல்.
   - ௐ இலங்கையிலிருந்து வருகை தருகின்ற அடியவர்கள் இலவசமாகத் தங்கி இளைப்பாறிச் செல்லுமிடமாகத் திகழ்கின்றது.

07. சைவச் சூழலில் ஆங்கில வழிக் கல்வி பெற விரும்பும் சைவ மாணவர்களுக்காகச் சபை மேற்கொண்ட பணிகள் யாவை?

- ௐ 1890ம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி உருவாக்கப்பட்டது. அது விடுதி வசதியுடன் விளங்கியது.
- ௐ இக்கல்லூரி கல்கத்தா பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரியாகச் செயற்பட்டது.
- ௐ இந்துக் கல்லூரியின் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கும் அவற்றுக்கு வேண்டிய உதவிகளை நிறுவன ரீதியாகப் பெற்றுக் கொடுப்பதற்குமாக இந்துக் கல்லூரி அதிகார சபை நிறுவப்பட்டது.
- ௐ இதன் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி, காரைநகர் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் இந்துக்கல்லூரி முதலான பல கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டன.

அதாவது இக்கல்லூரியின் மூலம் ஆங்கிலக் கல்வி வழங்கப்பட்டது.

08. சைவ பரிபாலன சபை தமிழ்மொழி, சைவசமயம் என்பவற்றின் மேம்பாட்டிற்காக மேற்கொண்ட பணிகள் யாவை?

- ௐ வளர்ந்தோருக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் பல பரீட்சைகளை நடாத்துதல், 1963ம் ஆண்டு முதல் சைவ சித்தாந்த பண்டிதர் பரீட்சைகளை நடாத்தி, சித்தியடைந்தவர்களுக்குப் பட்டங்களை வழங்கி வருகின்றது.
- ௐ பாடசாலை மாணவர்களுக்கான சமய பாடப் பரீட்சையையும் தொடர்ந்து நடத்தி வருகின்றது. அதுபோன்று தரம் இரண்டு முதல் தரம் எட்டு வரையான மாணவர்களுக்கு தமிழ்மொழியும் இலக்கியமும், உயர்தர மாணவர்களுக்கான இந்துநாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகளையும் நடாத்தி வருகின்றது.

09. சைவ பரிபாலன சபை வெளியிட்ட நூல்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

- ௐ சிறு பிள்ளைப் பாடம்
- ௐ இலக்கிய வாசகம்
- ௐ செந்தமிழ்க் கருவூலம்
- ௐ படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்
- ௐ நாவலரின் சைவ வினா விடை
- ௐ சமய குரவர், சந்தானகுரவர் வரலாற்றுச் சுருக்கம்
- ௐ சைவக்கிரியை விளக்கம்
- ௐ நமசிவாய மாலை
- ௐ தஞ்சை வாணன் கோவை
- ௐ மயூரகிரிப் புராணம்

10. இன்று இச்சபை மேற்கொண்டு வரும் பொதுப்பணிகள் மூன்றினைத் தருக.

- ௐ இச்சபை இன்று, பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்குச் சபை நிதியுதவி வழங்கி வருகின்றது.
- ௐ சைவ மாநாடுகள், சைவக்குருமார்களுக்கான பயிற்சிகள், திருமுறைகளைப் பண்ணோடு ஓதுவதற்கான பயிற்சிகள், சிவதீட்சை வழங்குதல் என்பவற்றை சபை தொடர்ந்து நடாத்தி வருகின்றது.
- ௐ 63 நாயன்மார்கள், சேக்கிழார், ஞானப்பிரகாச முனிவர், நாவலர் முதலானோர் குருபூசைகளையும் நடாத்தி வருகிறது.

11. சைவ பரிபாலன சபையின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மத்திய நிலையமாக விளங்குவது எது?

- ௐ நாவலர் ஆச்சிரமம்

12. சைவ மக்களுக்கான பத்திரிகையாக விளங்குவது எது? அதன் முதற்பிரதி எப்போது வெளிவந்தது?

- ௐ இந்து சாதனம் - Hindu Organ, 1889ம் ஆண்டு புரட்டாதி மாதம்

## 25. அன்னதானம்

01. தானம் என்பது யாது?
   ௐ ஒருவர் எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது, மன மகிழ்ச்சியோடு ஏதேனும் ஒன்றைப் பிறருக்குக் கொடுப்பதே சிறந்த ''தானம்'' ஆகும்.

02. நாம் செய்யக்கூடிய தானங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
   ௐ கோதானம், வஸ்திரதானம், வித்தியாதானம், பூதானம், கன்னிகாதானம்

03. மேலான தானமாகக் கருதப்படுவது எது? அதற்கான காரணம் யாது?
   ௐ அன்னதானம்
   ௐ ஏனெனில் ஒருவர் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானது உணவு (அன்னம்) என்பதாலாகும்.

04. தர்ம சத்திரங்கள், மடங்கள் என்பவற்றை எமது முன்னோர்கள் அமைத்ததற்கான காரணம் யாது?
   ௐ வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறுவதற்கும், உணவருந்திப் பசியாறுவதற்கும் தர்ம சத்திரங்கள், மடங்கள் என்பவற்றைக் கட்டி வைத்தனர்.

05. சிவனடியார்களுக்கு உணவளிப்பது எவ்வாறு சுட்டப் பெறுகின்றது?
   ௐ மகேஸ்வர பூசை

06. பஞ்ச காலத்தில் ஆறுமுக நாவலர் மேற்கொண்ட தருமம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
   ௐ கஞ்சித் தொட்டித் தருமம்

07. சந்நிதி முருகனை "அன்னதானக் கந்தன்" எனக் குறிப்பிடுவதன் காரணம் யாது?
   ௐ ஏனெனில் இவ்வாலயத்தில் நித்தமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

08. சிவனடியார்களுக்கு அமுதூட்டும் தொண்டினைச் செய்த நாயன்மார் மூவரைக் குறிப்பிடுக.
   ௐ இளையான் குடிமாற நாயனார்
   ௐ காரைக்காலம்மையார்

09. அன்னதானம் ஏனைய தானங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?
   ௐ ஏனெனில் அன்னதானமே தானம் பெறுபவர் திருப்தி அடையும் வரை வழங்கக் கூடியதொன்றாகும் என்பதனாலாகும்.

10. அன்னதானத்தின் சிறப்புப் பற்றி நாவுக்கரசர் பாடிய பாடலை எழுதுக.
   ௐ அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
   பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமியை
   என்னம் பாலிக்குமாறு கண்டு இன்புற
   இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே.

11. தானம் தொடர்பாக ஔவைப் பாட்டியார் கூறிய முதுமொழி எது?
   ௐ ஈதல் அறம்

12. அன்னதானக் கந்தன் என அழைக்கப்படும் ஆலயம் எது?
   ௐ செல்வச் சந்திநி ஆலயம்

13. ஆலய மகோற்சவ காலங்களில் தானம் தொடர்பாக மேற்கொள்ளும் விடயங்கள் எவை?
   ௐ அடியார்களின் நலன் கருதி வழி தோறும் தண்ணீர்ப் பந்தல்களும் தான சாலைகளும் அமைத்தல்.

## 26. பகவத் கீதையும் தம்ம பதமும்

01. பகவத் கீதை யாரால் யாருக்கு உபதேசிக்கப்பட்டது?
ௐ கிருஷ்ண பரமாத்மாவால் அர்ஜுனனுக்கு

02. தம்மபத அறிவுரைகள் யாரால் உபதேசிக்கப்பட்டவை?
ௐ கௌதம புத்தரால்

03. இவ்விரு நூல்களும் எந்த எந்த நூல்களின் பகுதிகளாக உள்ளன?
ௐ பகவத் கீதை – மகாபாரதம்
ௐ தம்மபதம் - திரிபிடகம்

04. இவ்விரு நூல்களினதும் பொதுப் பண்புகள் இரண்டு கூறுக.
ௐ ஆன்ம விடுதலை
ௐ அறம்
ௐ உண்மைப் பொருளைக் காண விழைதல்

05. இந்நூல்கள் அறத்துக்கு முதன்மையளிப்பதன் காரணம் யாது?
ௐ மானுட விடுதலையைப் பெறுவதற்காகவாகும்.

06. பிரஸ்தான திரயங்கள் எவை?
ௐ பகவத் கீதை
ௐ உபநிடதம்
ௐ பிரம்ம சூத்திரம்

07. பகவத் கீதையில் எத்தனை அத்தியாயங்கள், பகுதிகள் உண்டு?
ௐ 18 அத்தியாயங்கள்
ௐ கர்மயோகம், பக்தி யோகம், ஞானயோகம் என்னும் 03 பகுதிகள் உண்டு.

08. தம்மபதம் எப்பகுதியில் அடங்கியுள்ளது?
ௐ திரிபிடகத்தில் உள்ள சுத்த பிடகத்தில் உள்ள ஐந்து பகுதிகளில் குத்தக நியாயம் எனும் பகுதியில் தம்மபதம் இடம்பெற்றுள்ளது.